வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 28.03.2024 வியாழக்கிழமை இதழ் : 88 பக்கங்கள் : 12

# ஜனாதிபதி ரணிலுக்கு மக்கள் ஆணை இல்லை

## நாமல் ராஜபக்ஷ அதிரடிக் கருத்து நல்லாட்சி அரசையும் சாடினார்

கொழும்பு, மார்ச் 28

பாராளுமன்றத்தின் ஊடாக அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதிக்கு மக்களாணை கிடையாது. கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படுபவர்கள் வெளியேறலாம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர், கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு 11

# முல்லைத்தீவு சுகாதார சேவை பணிப்பாளர் ஓமந்தையில் நடந்த கோர விபத்தில் மரணம்!



வவுனியா, மார்ச் 28

வவுனியா, ஓமந்தை பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அகிலேந்திரன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 11

# கட்டுப்பாட்டை இழந்த லொறி வீதி ஓரம் நின்றவரை மோதியது!

## புன்னாலைக்கட்டுவனில் ஒருவர் பலி!!

யாழ்ப்பாணம், மார்ச் 28

புன்னாலைக்கட்டுவானில் பாரவூர்தி மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வடக்கு புன்னாலைக் கட்டுவான் சந்திக்கு அருகில் நேற்று மாலை இந்த விபத்து நிகழ்ந்தது.

லாண்ட் மாஸ்டரில் வந்த ஒருவர் அதை வீதியோரம் நிறுத்தி விட்டு, வெற்றிலை பாக்கு மென்று கொண்டிருந்த போது, பாரவூர்தியொன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரைக்கு சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதில் லாண்ட் மாஸ்டர் சாரதி உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த சீனியன் இராசன் (வயது-65) என்பவரே உயிரிழந்தார். (அ)

# உரிய நேரத்தில் தேர்தல் நடக்கும்

கொழும்பு, மார்ச் 28

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்தச் சட்டமூலங்களால் எதிர்வரும் தேர்தல்கள் பிற்போடப்படும் என எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டை அரசாங்கம் முழுமையாக நிராகரிப்பதாகவும் அரசியலமைப்பின் படி உரிய நேரத்தில் தேர்தல் நடைபெறும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் 11

# ரஷ்ய - உக்ரைன் போரில் பங்கேற்கும் இலங்கையர்

## அல் - ஜசீரா வெளியிட்ட அதிர்ச்சி தகவல்



கொழும்பு, மார்ச் 28

உக்ரைனில் நடந்து வரும் மோதலுக்கு மத்தியில், அங்கு இலங்கையை சேர்ந்தவர்கள் ஆயும் ஏந்தி மோதலில் ஈடுபட்டு வருவதாக அல் - ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், உக்ரைன் மட்டுமல்லாது இருதரப்பிலும் இலங்கையர்கள் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அல் - ஜசீரா அறிக்கையொன்றையும் தயார்படுத்தியுள்ளது. இதனடிப் படையில், உக்ரைனில் ரஷ்யாவுக்காக போரிட்டதில் குறைந்தது 11

# புல்மோட்டை மணல் படிவில் சிர்கோனியம் பிரித்தெடுப்பு

கொழும்பு, மார்ச் 28

புல்மோட்டை தாது மணல் படிவுகளில் சிர்கோனியம் (Zirconium) என்ற கனிமத்தை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். 11

சிர்க்கோனியம் (Zirconium) என்பது Zr என்ற மூலக்கூற்று வாய்ப்பாடு கொண்ட ஒரு கனிமமாகும். இதன் அணு எண் 40 ஆகும். இத்தனிமத்தின் அணு நிறை 91.22, அடர்த்தி 6490 கி.கி /கன செ.மீ, உருகு நிலையும், கொதி நிலை யும் முறையே 1852 பாகை செல்சி யஸ், 4371 பாகை செல்சியஸ் ஆகும். சத்திரசிகிச்சை கத்திகள், சத்திர சிகிச்சை தையல் இழைகள், இரசா யனப் பொருட்கள் உற்பத்திகள், நுட்பமான இயந்திர பொறிகள் என்பவற்றை தயாரிக்கப் பயன்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 225 பேரில் பல கள்வர்கள்!

## ரஞ்சன் ராமநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 28

பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரில் பல கள்வர்கள் உள்ளனர் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெற்றால் நெருக்கடி ஏற்படும். எனவே பெரும்பாலும் விரைவில் பொதுத்தேர்தலை நடத்தவேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அதாவது இந்த நாட்டை வீணடித்த 225 பேருக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்க வேண்டாம் என மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனென்றால் 225 பேரில் பல கள்வர்கள் உள்ளனர். இந்த நாட்டில் ஊழல்வாதிகளே இவ்வாறான கள்வர்களை பாதுகாக்கின்றனர். போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மணல்கொள்ளையர்கள், கப்பம் பெறுவோர் தரமற்ற மருந்து இறக்குமதி செய்பவர்கள் இதில் உள்ளடங்குகின்றனர். 11



# காணிகளை விடுவிக்கக்கோரி கேப்பாபிலவு மக்கள் போராட்டம்!

முல்லைத்தீவு, மார்ச் 28

இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி நேற்று புதன்கிழமை கேப்பாபிலவு இராணுவ படைதலைமையகத்துக்கு முன்பாக கிராம மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு இராணுவ படைதலைமையகத்துக்கு இராணுவ தளபதி நேற்று வருகை தந்த நிலையிலேயே இந்தப் 11

# பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரானார் நாமல்!



கொழும்பு, மார்ச் 28

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் கட்சியின் நிறைவேற்று சபை கூட்டம் நேற்று புதன்கிழமை பிற்பகல் கொழும்பு விஜயராம மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டி. வி. சானக்க, அங்கு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

முன்னதாக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஒருவர் மற்றொருவரை கிண்டல் செய்தால், ஒரு பேச்சு வழக்கில் சொல்வார்கள், "பகிடி விடலாம்தான் ஆனால், படினம் விடக்கூடாது" என்று.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக அண்மைக் காலமாக தமிழர் தரப்பில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

வழக்கம்போல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துவிட்டது. ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களிப்பவர்கள் அண்ணளவாக எழுபது வீதமானவர்கள்தான். மிகுதி முப்பது வீதமானவர்கள் பல்வேறு காரணங்களால் தேர்தல்களில் வாக்களிப்பதில்லை. அவர்களில் பலர் நாட்டில் இல்லாமலும் இருக்கலாம். ஆனால், அவ்வாறு வாக்களிக்காதவர்கள் எல்லோருமே முன்னணியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுதான் வாக்களிக்கவில்லை என்று திருப்திப்பட்டுக் கொள்ளலாம்.

இதேவேளை, குத்துவிளக்கு சின்னத்துடனான ஐந்து கட்சிகளின் கூட்டணியான -ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி தனது தலைமைத்துவக் கூட்டம் ஒன்றில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது குறித்து முதன்முதலில் பேசத் தொடங்கியது. அவ்வாறு பேசியபோதிலும் அந்த முடிவில் ஐந்து கட்சிகளும் ஒருமித்த முடிவில் இருக்கின்றனரா என்பது தெரியவில்லை. அவர்களில் ஒரு கட்சியான ஈ. பி. ஆர். எல். எவ். இந்தக் கோரிக்கையையே ஒரு பேரம்பேசலுக்கான கோரிக்கையாக கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இதேவேளையில்தான் "மக்கள் மனு"- வடக்கு, கிழக்கு சிவில் சமூக குழுவினர் நடத்திய இது தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய மூன்று வளவாளர்களும் தமிழ் மக்களுக்கு இன்று இருக்கக்கூடிய ஒரே தெரிவு தமிழ் பொதுவேட்பாளர்தான் என்று அழுத்திக் கூறினார்கள். தமிழ் மக்கள் இன்று தமது அரசியல் எதிர்பார்ப்பாக எதனை எதிர்நோக்கி இருக்கிறார்கள் என்பதை சர்வதேச சமூகத்துக்கு மாத்திரமல்ல சிங்கள தேசத்துக்கும் ஒருமித்த குரலில் சொல்வதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்றே ஒரே குரலில் சொன்னார்கள்.

முதலில் இந்தக் கோரிக்கையின் தாற்பரியத்தை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் அதனை விரும்பினால் - ஏற்றுக்கொண்டால் மாத்திரமே இந்த விடயத்தில் முன்னோக்கி செல்லமுடியும். அப்படி மக்கள் திரண்டுவிட்டால் அவர்களின் வாக்குகளை நம்பியிருக்கும் அரசியல் கட்சிகள் பின்னால் வர வேண்டியே இருக்கும்.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது:

இந்த பொதுவேட்பாளர் பற்றிய குரல்கள் எழத் தொடங்கியதும் ஒருசிலர், இது இந்தியாவின் வேலை என்றார்கள். பொதுவேட்பாளர் என்ற பயத்தைக் காட்டி வேட்பாளர்களை பயமுறுத்திவிட்டு, பதின்மூன்றை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கான முயற்சி என்றார்கள். அப்படி அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கவே செய்தது. ஏனெனில், இந்த பொதுவேட்பாளர் விவகாரத்தை முதலில் கையிலெடுத்த கட்சியிலிருந்தே சிலர் பதின்மூன்றை வலியுறுத்த நல்ல சந்தர்ப்பம் என்று பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் இன்னுமொரு சாரார், இது ரணிலை வெல்ல வைப்பதற்கான முயற்சி என்றனர். அது ஏன் என்பது புரியாமல் தடுமாறியபோதுதான் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களிக்க இருக்கிறார்கள் என்றும் அவருக்கு கிடைக்கும் வாக்குகளை கிடைக்காமல் செய்தால் ரணில்தான் அதனால் பயன்பெறுவார் என்றும் விளக்கம் தந்தார்கள்.

அதாவது, இன்று தேர்தல் நடந்து அதில் சஜித்தும் ரணிலும் போட்டியிட்டால் தமிழ் மக்கள் சஜித்துக்குத்தான் வாக்களிப்பார்கள் என்பது - சொல்லப் போனால் பகிடி விடுவது போன்றது. தமிழ் மக்களின் மனநிலையை தெரிந்துகொள்ளாமல் ஒருவர் கதைப்பதை பகிடி என்று சொல்வதில் தவறிருக்காது.

ஆனால் கனடாவிலிருந்து ஒருவர், இதுகுறித்து தெரிவித்திருப்பதுதான் ஆச்சரியமானதாக இருந்தது.

அதாவது தமிழ் மக்கள் ஜே.வி. பியின் அநுரகுமார திஸநாயக்கவுக்கே வாக்களிக்க இருக்கின்றனர் என்றும் அவருக்கு விழுகின்ற வாக்குகளை விழாமல் செய்வதன் மூலம் ரணிலை வெல்ல வைப்பதற்கான முயற்சியே இந்த தமிழ் பொதுவேட்பாளர் முயற்சி எனவும் அதற்காக தெற்கின் அதிகாரவர்க்கத்திடம் "பெட்டி" வாங்கப்பட்டு விட்டது என்றும் புதிய கதை சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

இவர்கள் எந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அநுரவுக்கு விழவிருக்கின்ற ஒரு சில ஆயிரம் வாக்குகளை விழாமல் செய்யப் போகிறார்கள் என்கிறார்களா? அல்லது தாயகத்தில் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றிய எந்த அறிவும் இல்லாமல் இருக்கிறார்களா என்பது தெரியவில்லை.

அதைப் படித்தபோதுதான், "பகிடி விடலாம் கண்டியளோ ஆனால் படினம் விடக்கூடாது" என்று சொல்லவேண்டும் போல இருக்கிறது.!

- ஊர்க்குருவி.

# சட்டத்தரணியை கைது செய்ய இடைக்கால தடை உத்தரவு

கொழும்பு, மார்ச் 28

அண்மையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் சட்டத்தரணி அச்சல செனவிரத்னவை எதிர்வரும் ஜூன் 19 ஆம் திகதி வரை கைது செய்வதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

தம்மைக் கைது செய்வதை தடுக்குமாறு உத்தரவைப் பிறப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபோல ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது. (ஐ)

# 300 அடி ஆழ குழாய் கிணறு அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச் 28

ஒட்டுசுட்டானில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையால் அமைக்கப்படவுள்ள 300 அடி ஆழ குழாய் கிணறு அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள ஒட்டுசுட்டான் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் அலுவலக காணிக்குள் 300 அடி ஆழம் கொண்ட குழாய் கிணறு தோண்டப்படுவதால் அருகில் உள்ள விவசாயிகளின் நிலத்தடி நீர் உறிஞ்சப்படும் என தெரிவித்து விவசாயிகள் மக்கள் இணைந்து இதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்கள்.

ஒட்டுசுட்டான், சிவநகர், காதலியார் சமணங்குளம், போன்ற கிராமங்களில் வசிக்கும் குடும்பங்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்தநிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச குடிதண்ணீர் திட்டத்துக்காக நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபை ஒட்டுசுட்டான் நீர்வழங்கல் விநியோகத் திட்ட அலுவலக காணிக்குள் அனுமதியற்ற முறையில் 300அடி ஆழத்தில் நிலத்தடி நீரினை உறுஞ்சி ஏனைய பிரதேச மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஒட்டுசுட்டான் நீர்வழங்கல் விநியோகத்திட்ட அலுவலகம் அமைக்கும் போது பேராற்றில் இருந்து தண்ணீரை கொண்டு வந்து சுத்திகரித்து மக்களுக்கு வழங்குவதாக அறிவித்தே நீர்வழங்கல் திட்டத்தை மக்களுக்கு அறிமுகம் செய்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த நிலையில் அலுவலகம் அமைந்த காணிக்குள் 300 அடி ஆழம் கொண்ட நிலத்தடி தண்ணீரை உறுஞ்சும் குழாய் கிணறு அமைக்கும் பணிகள் அண்மை நாட்களாக நடைபெற்று வந்ததை அறிந்த கிராம மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் ஒன்று கூடிய போது அங்கு கிராம சேவையாளர் மற்றும் பொலிசார் வருகை தந்து மக்களின் பிரச்சனையை கேட்டறிந்தனர்.

எவரின் அனுமதியும் இன்றி நிலத்தடி நீரை உறுஞ்சும் இந்த செயற்பாட்டிற்கு அருகில் உள்ள கிராம மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் இந்த குழாய் கிணறு அமைக்கு நடவடிக்கையை கைவிடவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்கள்.

பொலிஸாரின் பிரசன்னத்துடன் குழாய்கிணறு அமைக்கும் இயந்திரம் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பில் அரச மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியபின்னர் குழாய் கிணறு அமைக்கும் திட்டத்தை முடிக்கு கொண்டு வருவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (ஐ)

# மாணவிகளுக்கு சுகாதார அணையாடை வவுச்சர்கள்!

கொழும்பு, மார்ச் 28

பாடசாலை மாணவிகளுக்கு சுகாதார அணையாடைகளை (நாப்கின்) கொள்வனவு செய்வதற்கான வவுச்சர்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் சித்திரை புத்தாண்டின் பின்னர் பின்தங்கிய பகுதிகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட பாடசாலைகளை சேர்ந்த சுமார் 8 இலட்சம் பாடசாலை மாணவிகளுக்கு சுகாதார அணையாடைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக மாணவி ஒருவருக்கு தலா 1,200 ரூபாய் பெறுமதியான வவுச்சர் வழங்கப்படும் எனவும், இந்த திட்டத்துக்காக 100 கோடி ரூபாயை



ஒதுக்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (ஐ)

# 53 மசாஜ் நிலையங்கள் மூடல் 137 பெண்கள் கைதாகினர்!

## - இருவருக்கு எய்ட்ஸ் தொற்று -

கொழும்பு, மார்ச் 28

நீர்கொழும்பில் மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் இயங்கிய விபசார விடுதிகளில் பணிபுரிந்த இரு பெண்களுக்கு எய்ட்ஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக மருத்துவ பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து நீர்கொழும்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 53 மசாஜ் நிலையங்கள் மூடப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மேலும், அவற்றில் பணியாற்றிய 137 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
28.03.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# செல்வநாயகத்துக்கு தெரியாத ஜனநாயகம்!

இலங்கை தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகரும் தமிழ்த் தேசிய அரசியலின் தந்தை என்றும் அழைக்கப்படும் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் 125ஆவது பிறந்ததினம் இன்னும் சில தினங்களில் நினைவுகொள்ளப்படவுள்ளது. இது தொடர்பில் நிகழ்வு ஒன்றும் நடைபெறவுள்ளது.

1949ஆம் ஆண்டு இலங்கை தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. கட்சியின் அங்குரார்ப்பண கூட்டம் கொழும்பு மருதானையிலுள்ள அரசாங்க லிகிதர் சேவை மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது செல்வநாயகம் கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தெரிவில் போட்டி நடைபெற்றதில்லை. செல்வநாயகம் இருக்கும் வரையில் மட்டுமல்ல, அதன் பின்னரும்கூட அவ்வாறானதொரு மரபே பின்பற்றப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தால் தேவை கருதி உயிரூட்டப்பட்ட பின்னரும்கூட கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் தெரிவுகளுக்கு போட்டி நடைபெற்றதில்லை.

இம்முறைதான் அவ்வாறானதொரு போட்டி நடைபெற்றது. அதன் விளைவு என்ன என்பதை மக்கள் அறிவர். போட்டியிட்டவர்களில் ஒருவரான எம். ஏ. சுமந்திரன் இதனை "ஜனநாயகத்தின் வெற்றி", என்றார் - அவ்வாறாயின் அந்த ஜனநாயக பாரம்பரியம் - கட்சியை உருவாக்கிய செல்வநாயகம் - அவரைப் பின்தொடர்ந்து வந்தவர்கள் எவருமே அறியாத ஒன்றா? அவ்வாறாயின், தமிழ் அரசுக் கட்சி உருவாக்கப்பட்டு 73 வருடங்களுக்கு பின்னர்தான் அந்தக் கட்சிக்கான ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதா? காலத்தில் முதன்முதலாக 2023இல்தான் தமிழ் அரசுக் கட்சியின் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதா? இவ்வாறு ஜனநாயகத்தை நிலைநாட்ட முற்பட்டதன் விளைவு என்ன? அது கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லப் பயன்பட்டிருக்கின்றதா அல்லது கட்சியை கீழ்நிலைக்குள் தள்ளியிருக்கின்றதா?

இன்று தமிழ் அரசுக் கட்சியின் உள்விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கின்றது. ஒரு தரப்பு மீளவும் தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றது. இந்த நிலையில் கட்சியின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டால் இந்தப் பிரச்னையை இலகுவாகத் தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால், தங்களின் அதிகார நலன்கள் மட்டுமே முக்கியமென்று எண்ணினால் பிரச்னைக்கு தீர்வில்லை.

ஒரு கட்சிக்குள் போட்டியின் மூலம் பதவிகளைத் தீர்மானிக்க முற்பட்டால் நிச்சயம் பிளவுகள் ஏற்படும். கட்சி இரண்டு அல்லது மூன்று அணிகளாகப் பிளவுறும் - இதனைக் கருத்தில்கொண்டுதான் செல்வநாயகம் அவர்கள் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தலைவர்களைத் தெரிவு செய்யும் மரபை உருவாக்கியிருந்தார். அனைவராலும் அது ஒரு மரபாகவே பின்பற்றப்பட்டது. செல்வநாயகத்தின் காலத்தில் அவர் எதிர்பார்த்தவாறு அரசியலில் வெற்றிகளை பெற முடியாவிட்டாலும்கூட, தனக்கு பின்னர் கட்சியை கட்டுக்கோப்புடன் கொண்டு செல்லும் வகையிலான பலமான அடித்தளத்தை உருவாக்குவதில் அவர் வெற்றி பெற்றிருந்தார். இதேவேளை தனது அணுகுமுறை காலத்துக்குப் பொருந்தாதென்று கருதியபோது அதனை மாற்றியமைக்கும் வல்லமையுள்ள தலைவராகவும் அவர் இருந்திருக்கின்றார்.

தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கிய அவரே பிற்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார். தனது பரம வைரியான ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் கைகோக்கவும் அவர் தயங்கவில்லை. பொன்னம்பலத்தின் வீடு தேடி சென்று கைநீட்டினார். ஜீ. ஜீ. பொன்னம்பலம் அரசியல் ரீதியில் கொள்கை விலகி செல்கின்றார் என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இலங்கை தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார். ஆனால், சூழ்நிலைகள் மாறியபோது, அதற்கேற்ப தானும் மாற வேண்டிய யதார்த்தத்தை உணர்ந்தபோது - தன்னை மாற்றிக்கொள்ள அவர் சிறிதும் யோசிக்கவில்லை.

இவ்வாறான ஒருவரின் மரபில் வந்ததாகக்கூறிக்கொள்வோர் இன்று எந்த நிலையில் இருக்கின்றார்கள்? தமிழ் அரசுக் கட்சியை உண்மையிலேயே நேசிப்பவர்கள் இருந்தால் அவர்கள் இது பற்றி இனியாவது சிந்திக்க வேண்டும்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் அனைத்துலக நாடக விழா!

*யாழ்ப்பாணம், மார்ச் 28*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்துலக நாடக விழா நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

நேற்று புதன்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இந்த நிகழ்வுகள் ஆரம்பமானது.

அனைத்துலக நாடக விழாவில் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களின் நாடகங்கள் மற்றும் தொழில்வாண்மை நாடகக் கலைஞர்களின் நாடகங்களும் நடைபெற்றன.

இந் நிகழ்வில் கலைப்பீட பீடாதிபதி



பேராசிரியர் சி.ரகுராம், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# தங்கத்தின் விலை குறைவடைந்தது!

*கொழும்பு, மார்ச் 28*

நாட்டில் நாளுக்கு நாள் தங்கத்தின் விலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வரும் நிலையில் நேற்று ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 6 இலட்சத்து 58 ஆயிரத்து 819 ரூபாயாக குறைவடைந்துள்ளது.

இதன்படி, 24 கரட் ஒரு கிராம் தங்கம் 23 ஆயிரத்து 240 ரூபாயாகவும், 24 கரட் 8 கிராம் ( ஒரு பவுண்) தங்கம் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் 950 ரூபாயாகவும், 22 கரட் ஒரு கிராம் தங்கம் 21 ஆயிரத்து 310 ரூபாயாகவும் , 22 கரட் 8 கிராம் (ஒரு பவுண்) தங்கம் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 450 ரூபாவாகவும், 21 கரட் 1 கிராம் தங்கம் 20 ஆயிரத்து 340 ரூபாயாகவும் , 21 கரட் 8 கிராம் (1 பவுண்) தங்கம் ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 700 ரூபாயாகவும் குறைவடைந்துள்ளன.

(ஐ)

## தந்தை செல்வாவின் நிலைப்பாடே தமிழ் மக்களுக்கு தற்போது தேவை

**முன்னாள் அரச அதிபர் வேதநாயகன்**

*யாழ்ப்பாணம், மார்ச் 28*

தற்போது தமிழ் மக்களுக்கு தந்தை செல்வாவின் ஒருமித்த நிலைப்பாடு மிகவும் முக்கியமான ஒன்று என யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 126 ஆவது பிறந்த தினம் தொடர்பாக நேற்று யாழ்ப்பாணத் தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இதனைக் குறிப்பிட்டார்.

தந்தை செல்வா அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களை ஒரு சரியான பாதையில் வழிநடத்தி சென் றார் அவரது வழிகாட்டல் தற்போதும் தமிழ் மக்களுக்கு தேவைப்படுவதாகவும் முன் னாள் அரசாங்க அதிபர் சுட்டிக் காட்டினார்.

தந்தை செல்வாவின் ஜனன தினம் தொடர்பாக அறங்காவலர் சபையின் தலைவர் பேரின்பநாயகம் அவர்களும் கருத்து வெளியிட்டார். (ஐ)

## ஆற்றில் நீராடிய 4 மாணவர்கள் பலி!

*நுவரெலியா, மார்ச் 28*


நுவலெியாவின் அலவ்வ பிரதேசத்தில் உள்ள மா ஓயா ஆற்றில் நீராட சென்ற 4 மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

ஐந்து பேர் அடங்கிய மாணவர் குழுவொன்று நீராட சென்ற போது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நீரில் மூழ்கிய மற்றுமொரு மாணவர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - பொல்ஹாவெல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 9ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு நீரில் மூழ்கினர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்** விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விஜபிகள் வாடிக்கையாளர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்** வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்** பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்** பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்** உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கன்னி** கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். அழகும் இளமையும் கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். தடைகள் உடைபடும் நாள்.

**துலாம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**விருட்சிகம்** விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**தனுசு** ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சிறப்பான நாள்.

**மகரம்** மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கும்பம்** இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**மீனம்** சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக போய்முடியும். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

# தமிழீழம் அமைக்க பொது வாக்கெடுப்பு; இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## பாட்டாளி மக்கள் கட்சி தேர்தல் விஞ்ஞாபனம்

சென்னை, மார்ச் 28

ஈழத் தமிழர்களுக்கு தாயகமாக தமிழீழத்தை அமைப்பது குறித்து ஐ. நா. மூலம் உலகம் முழுவதும் வாழும் ஈழத் தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்த இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும் என பா. ம. க. வலியுறுத்தும்.

- இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சி (பா. ம. க.) தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சி இந்தியாவை ஆளும் கட்சியான பா. ஜ. கவுடன் கூட்டணி அமைத்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறது.

நேற்றைய தினம் அந்தக் கட்சி தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. கட்சியின் நிறுவுநர் ராமதாஸ், தலைவர் அன்புமணி ஆகியோர் இணைந்து அதனை வெளியிட்டனர்.

ஈழத்தமிழர்கள் விடயத்துக்கு தனியான முக்கியத்துவம் அளித்துள்ள அந்தக் கட்சி,

இலங்கை போர் முடிந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்ட நிலையில், இலங்கைமீதான போர்க் குற்ற விசாரணையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பா.ம.க. வலியுறுத்தும்.




தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழும் வகையில் அனைத்து வசதிகளும், சலுகைகளும் வழங்கப்படும். அவர்கள் விரும்பும் பட்சத்தில், மத்திய அரசை வலியுறுத்தி அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை பெற்றுத்தர பா. ம. க. பாடுபடும் - என்று கூறியுள்ளது.

தவிர, மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு, தமிழக மீனவர்கள் சிங்கள கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுக்க நிரந்தர தீர்வு காணப்படும், இந்திய - இலங்கை கூட்டுப்பணிக் குழு மூலம் பேச்சு நடத்தி, இந்திய இலங்கை கடல் எல்லையில் இரு தரப்பு மீனவர்களும் முறை வைத்து மீன்பிடிக்கும் நடைமுறை உருவாக்கப்படும், 1974 ஆம் ஆண்டில் இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட கச்சத்தீவை மீட்க பா. ம. க. பாடுபடும் என்பன உள்ளிட்ட பல அம்சங்கள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஐ)

# நான் கூட்டணி வைத்திருந்தால் கேட்ட சின்னம் கிடைத்திருக்கும்!

## நாம் தமிழர் சீமான்



சென்னை, மார்ச் 28

"கூட்டணி வைத்திருந்தால் நான் கேட்ட சின்னம் வந்திருக்கும். அப்படி கூட்டணி வைத்தவர்களுக்கு சின்னங்கள் வந்துள்ளன. நான் கூட்டணி வைக்க மறுத்துவிட்டேன். எப்போதும் கூட்டணி வைக்க மாட்டேன். இந்த நாட்டில் நல்ல அரசியலை உருவாக்க நினைக்கிறேன். எந்தச் சூழலிலும் என் வாழ்நாளில் எந்த சமரசமும் செய்ய மாட்டேன்." என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

2024 மக்களவைத் தேர்தலில் தனித்து போட்டியிடப் போவதாக அறிவித்திருந்த நாம் தமிழர் கட்சியின் கரும்பு விவசாயி சின்னம் வேறு மாநில கட்சியான பாரதிய மக்கள் ஐக்கிய கட்சிக்கு ஒதுக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாம் தமிழர் கட்சி சார்பில் தொடரப்பட்ட வழக்கு டில்லி உயர் நீதிமன்றத்தில் முடித்து வைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, நாம் தமிழர் கட்சிக்கு ஒலிவாங்கி (மைக்) சின்னம் ஒதுக்கப்பட்டது. இந்த நிலையில், தனது சின்னத்தை மக்களிடம் அறிமுகப்படுத்தி பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "கடைசி நொடி வரை போராடி பார்த்தேன். ஆனால்? கிடைக்கவில்லை. அதனால் தான் மைக் சின்னத்தில் போட்டியிடுவது என்று முடிவெடுத்தோம். இவ்வளவு இடையூறுகளையும் தாங்கிக்கொண்டு நாங்கள் களத்தில் நிற்பது மக்களுக்காகதான். மக்கள் எங்களை கைவிட்டுவிட மாட்டார்கள் என்று நம்புகிறோம் - என்றார்.

# ம. தி. மு. கவுக்கு பம்பரம் சின்னம் வழங்க மறுப்பு!

சென்னை, மார்ச் 28

ம. தி. மு. கவுக்கு பம்பரம் சின்னம் ஒதுக்க முடியாது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. சின்னம் தொடர்பாக முடிவைத் தெரிவிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் தேர்தல் ஆணையம் இவ்வாறாக மறுப்பு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தலில் தி. மு. க. கூட்டணியில் திருச்சி தொகுதியில் ம. தி. மு. க. போட்டியிடுகிறது.

தாங்கள் கோரிய பம்பரம் சின்னம் கிடைக்காத நிலையில் ம. தி. மு. க. நீதிமன்றத்தை நாடியது. ஆனால், ம. தி. மு. க. ஒரு தொகுதியிலேயே போட்டியிடுவதால் சின்னம் வழங்க முடியாது என்று தேர்தல் ஆணையம் நீதிமன்றத்துக்கும் கட்சிக்கும் அறிவித்துள்ளது. (ஐ)

# ஸ்டாலின் கைகாட்டுபவரே பிரதமர்!

கரூர், மார்ச் 28

"தமிழக முதல்வர் மு. க.ஸ்டாலின், மத்தியில் யாரை பார்த்து கை நீட்டுகிறாரோ அவர்தான் இந்திய நாட்டின் பிரதமர்." என்று கரூரில் தேர்தல் பிரசாரத்தின்போது அமைச்சர் சக்கரபாணி பேசினார்.

கரூர் மக்களவை தொகுதி வேட்பாளராக காங்கிரஸ் சார்பில் மீண்டும் போட்டியிடுகிறார் ஜோதிமணி. இவரை ஆதரித்து பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "கடந்த தேர்தலில் 39 தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெற்றது. இந்த முறை 40 தொகுதிகளில் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்தியில் யாரை பார்த்து கை நீட்டுகிறாரோ அவர் தான் இந்திய நாட்டின் பிரதமர். தமிழகத்தில் கடந்த 34 மாதங்களில் ஏராளமான சாதனை திட்டங்களை தமிழக முதல்வர் செய்துள்ளார். இந்த சாதனைகளை எடுத்துக் கூறி மக்கள் மத்தியில் வாக்கு சேகரிப்போம்"- என்றார். (ஐ)

# பொதுஜன பெரமுனவிடம் 5 ஜனாதிபதி வேட்பாளர்கள்!

## நாமல் ராஜபக்ஷ கருத்து

கொழும்பு, மார்ச் 28

**பொதுஜன பெரமுனவில் தற்போது வரை நான்கு அல்லது ஐந்து ஜனாதிபதி வேட்பாளர்கள் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அம்பாந்தோட்டையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நாமல் மேற்கண்டவாறு கூறினார்.

ஒரு பிரதேச சபைக்கு கூட வேட்பாளர்களை காண முடியாது என்று கூறிய கட்சி இன்று பல ஜனாதிபதி வேட்பாளர்களைக் கொண்டுள்ளதாகவும் நாமல் குறிப்பிட்டார்.

இதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் பொது வேட்பாளரை முன்வைக்க தாம் தயாராக இருப்பதாகவும் அந்த வேட்பாளர் யார் என்பதை கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ)



# சீனா - இலங்கை இடையில் ஒன்பது புதிய ஒப்பந்தங்கள்!

கொழும்பு, மார்ச் 28

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒன்பது புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தங்கள் இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் சீன பிரதமர் லீ கியாங் தலைமையில் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

சீனாவின் தியானன்மென் சதுக்கத்தில் உள்ள மக்கள் மாவீரர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பிரதமர் இராணுவ மரியாதையை பெற்றுக்கொண்டதன் பின்னர் இரு தரப்பு கலந்துரையாடல் இடம்பெற்றது



மேலும், கைச்சாத்திடப்பட்ட ஒன்பது புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் ஊடாக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்படும் என இரு நாட்டு பிரதமர்களும் உறுதிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மதுபான விலை குறைக்கப்படுமென வெளியாகும் தகவல் உண்மையல்ல!

ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
இலங்கை மதுவரித் திணைக்களம்
EXCISE DEPARTMENT OF SRI LANKA

கொழும்பு, மார்ச் 28

மதுபானத்தின் விலையை குறைக்கும் நோக்கில் மதுவரி குறைக்கப்படும் என வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என மதுவரி திணைக்களம் அறிவித்துள்ளது.

அவ்வாறான திருத்தம் தொடர்பான அறிவிப்போ அல்லது அறிவுறுத்தலோ தமது திணைக்களத்துக்கு வழங்கப்படவில்லை என மதுவரி திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க நேற்று முன் தினம் பதுளை பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னர் மதுபானத்தின் விலையை குறைக்க முயற்சிப்பதாக தெரிவித்தார்.

எவ்வாறாயினும், மதுவரி விகிதங்கள் அல்லது மதுபானங்களின் விலை குறைக்கப்படமாட்டாது என மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# கள்வர்களையே அரசாங்கம் தொடர்ந்தும் பாதுகாக்கிறது

## விஜித ஹேரத் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 28

வாழ்க்கைச் செலவை அதிகரித்து அரசாங்கம் கள்வர்களை பாதுகாக்கும் நடவடிக்கையையே மேற்கொண்டு வருவதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. ஆனால் வருமானம் அதிகரிக்கவில்லை. வரவின்றிச் செலவு அதிகரித்துச் செல்கின்றது. பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறுமாயின் வாழ்க்கைச் செலவு குறைவடையவேண்டும்.

மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம் குறைவடைய வேண்டும். நடைமுறையில் அவ்வாறு எதனையும் செய்யாமல் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறமுடியாது.

எனவே பொருளாதா கொள்கை தவறாக காணப்படுகின்றது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. நாட்டில்



பலர் வேலைவாய்ப்பு இன்றி உள்ளனர்.

தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுள்ளன. கோப் குழுவின் தலைவராக கள்வரை நியமித்துள்ளனர். கள்வர் மற்றுமொரு கள்வரை பிடிக்கமாட்டார்.

எனவே அரசாங்கம் கள்வர்களை பாதுகாக்கும் நடவடிக்கையினையே தொடர்ந்தும் முன்னெடுத்துள்ளது-என்றார். (அ)

# தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழு அமைக்க முடிவு!

கொழும்பு, மார்ச் 28

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவும் அமைக்கப்பட உள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2021-2022 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, உயர்தரத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் 17 பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அந்த வருடங்களில் திட்டமிட்டபடி மாணவரை இணைக்கும் பணி நடக்கவில்லை என தகவல்கள் வெளியாகி வருகின்றன.

ஆனால் அந்த தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை உறுதிப்படுத்த உரிய ஆவணங்கள் என்னிடம் உள்ளன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட சில சிக்கல்களினால் சில பல்கலைக்கழகங்களின் இறுதி யாண்டு மாணவர்கள் சரியான நேரத்தில் படிப்பை முடிக்க முடியாமல் இன்னும் பல்கலைக் கழகங்களில் தங்கி உள்ளனர்.



விரிவுரைகள் மற்றும் நடைமுறைக் கற்கைகளை நடத்துவதற்குத் தேவையான வகுப்பறை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன.

ஆனால் இந்த சிக்கல்களை தீர்க்க சில மாற்று வழிகளை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம்.

அத்தோடு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவும் அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக, முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கையும் அமைச்சிடம் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையை ஆய்வு செய்த பிறகு, இந்த ஆண்டுக்குள் தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைப்பது சாத்தியப்படும் என்று நம்புகிறேன்-என்றார். (அ)

# 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறார் யாசகம் பெறுகின்றனர்!

கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் யாசகம் பெறுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். இந்நிலைமை எதிர்காலத்தையும் பாதிக்கலாம்.

இது தொடர்பில் கவனம் செலுத்தாவிட்டால் வீதியில் யாசகம் பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து போதைப்பொருள் விற்பனை, திருட்டு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட குற்றச் செயல்கள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்த சிறுவர்களில் சிலர் தங்களது பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களினால்



யாசகம் பெறுவதற்கும் பணம் சம்பாதிக்கும் பிற நடவடிக்கைகளுக்கும் தள்ளப்படுவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

4 முதல் 15 வயதுக்கு உட்பட்ட பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்லாமல் வீதிகளிலும் புனிதத் தலங்களிலும் சன நெரிசல்மிக்க இடங்களிலும் யாசகம் பெறுகின்றனர்.

சில பெற்றோர்கள் இந்த சிறுவர்களை கூலி வேலைகளுக்காகவும் வீதியோர வியாபாரங்களுக்காகவும் பயன்படுத்துகின்றனர். இந்த சிறுவர்களில் சிலர் போதைப்பொருள் பாவனைக்கும் பல்வேறு குற்றச்செயல்களுக்கும் அடிமையாகி இருப்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது-என்றார். (அ)

ஈழநாடு



# பாதாள உலகக் குழுக்களால் சுற்றுலாத்துறையில் தாக்கம்!

## பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, மார்ச் 28**

**நாட்டில் இடம்பெறும் பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகள் சுற்றுலாத்துறையில் நேரடி தாக்கம் செலுத்துவதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.**

தென்மாகாணத்தில் இடம்பெறும் பாதாள உலக குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் தொடர்பில் சுற்றுலாப் பயணிகள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அஹூங்கல்ல, கொஸ்கொடை, ரத்கம மற்றும் ஹிக்கடுவை உள்ளிட்ட பிரதேசங்களில் இடம்பெறும் குற்றச்செயல்கள் காரணமாக சுற்றுலாப் பயணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அமைதியான சூழ்நிலையையே விரும்புகின்றனர். இந்நிலையில், அவர்கள் எமது நாட்டில் இடம்பெறும் துப்பாக்கி பிரயோகங்களைப் பார்க்கும்போது மிகவும் அதிர்ச்சியடைகின்றனர். இதனால் அவர்கள் இலங்கைக்கு வருகை தருவதை நிரந்தரமாக தவிர்க்கக்கூடும்.

எனவே, சட்டங்களை கடைப்பிடித்து சுற்றுலாப் பயணிகளுக்கு அமைதியான சூழலை ஏற்படுத்தி கொடுப்பது மிகவும் அவசியமாகும்-என்றார். (அ)

# மிதுவா வீடுமீது சூடு!

கொழும்பு, மார்ச் 28

அத்துருகிரிய கல்வருசாவ வீதி பகுதியின் பல குற்றச் செயல்களுக்கு தலைமை தாங்கிய குற்றவாளி எனக் கூறப்படும் “மிதுவா” என அழைக்கப்படும் மனோஜ் முத்துகுமாரன என்பவரின் வீட்டின் மீது இனந்தெரியாதேரால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் வீட்டின் ஜன்னல்கள், கதவுகள் மற்றும் சுவர்கள் சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இவர் நவகமுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல குற்றச் செயல்களுக்கு தலைமை தாங்கியுள்ளதாகவும், நவகமுவ பொலிஸ் அதிகாரிக்கு தொலைபேசி ஊடாக கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும் நுகேகொடை பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (அ)

# பஸ் தீப்பிடித்து எரிந்தது!

கொழும்பு, மார்ச் 28

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஒன்று குருநாகல் மல்கடுவாவ பிரதேசத்தில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

மாதம்பையிலிருந்து கம்பளை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸிலேயே இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

தீயினால் பஸ் சேதமடைந்துள்ளது.

அங்கு வந்த குருநாகல் தீயணைப்புப் பிரிவினர் தீயை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (அ)

# ரூ. 9,000 மில்லியன் பெறுமதியுள்ள போதைப்பொருட்கள் கைப்பற்றல்




கொழும்பு, மார்ச் 28

யுக்திய நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், இதுவரை 9,000 மில்லியன் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

# கோட்டா அகற்றப்பட்ட பின்னணியில் வெளிநாடு; முழுமையான விசாரணை கோருகிறார் பிரசன்ன



கொழும்பு, மார்ச் 28

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து அகற்றப்பட்டதன் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் உள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளமை குறித்து முழுமையான விசாரணைகள் இடம்பெறவேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மார்ச் 21ஆம் திகதி சபாநாயகர் இது குறித்து பகிரங்கமாக அறிவித்துள்ள போதிலும் ஏன் ஆளும்கட்சி உட்பட அனைத்து கட்சிகளும் அமைதியாக உள்ளன என கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரசன்ன ரணதுங்க இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மே 9, 2022 இல் அரகலய செயற்பாட்டாளர்கள் மீது இடம்பெற்ற தாக்குதலை தொடர்ந்து நாடாளவிய ரீதியில் பொதுஜன பெரமுனவை சேர்ந்தவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் எனக்கு திருப்தியளிக்கவில்லை.

விசாரணைகள் குறித்து எதுவும் தெரியாத நிலைமை காணப்படுகிறது.

திட்டமிட்ட கும்பலால் இழைக்கப்பட்ட வன்முறைகளால் சொத்துக்களை இழந்த பல அரசியல்வாதிகளால் நானும் ஒருவன். நான் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளேன். வீடியோக்களை மனித உரிமை ஆணைக்குழுவிடம் வழங்கியுள்ளேன். அவர்கள் முன்னிலையில் இரண்டு தடவை விசாரணைகளுக்காக ஆஜராகியுள்ளேன். ஆனால் மிகவும் மந்த கதியிலேயே விசாரணைகள் இடம்பெறுகின்றன-என்றார். (அ)

# மஹரகம வைத்தியசாலையில் கதிரியக்க சிகிச்சை இயந்திரம் பல நாட்களாக பழுது!

## பல சிறுவர்களின் உயிர்களுக்கு ஆபத்து

கொழும்பு, மார்ச் 28

கதிரியக்கச் சிகிச்சைக்கு அவசியமான இயந்திரம் செயல் இழந்துள்ளதால் மஹரகம வைத்தியசாலையில் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகளின் உயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் இயந்திரமே பழுதடைந்துள்ளது.

கடந்த பெப்ரவரி முதல் லீனியர் அக்சிலரேட்டர் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

நிலைமை பாரதூரமாக காணப்படுகின்றபோதிலும் சுகாதார அமைச்சு இது குறித்து அக்கறை செலுத்தவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

அபேக்சா மருத்துவமனையில் ஐந்து லீனியர் அக்சிலேட்டர்கள் உள்ளன. சிகிச்சைகளை வழங்குவதில் இவை முக்கிய பங்களிப்பு செய்கின்றன. எனினும் பழுதடைந்த இந்த லீனியர் அக்சிலேட்டர்கள் சிறுவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு மிகவும் அவசியமானவையாக காணப்படுகின்றன.

லீனியர் அக்சிலேட்டர்கள் செயல் இழந்துள்ளதால் 500 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக காத்திருக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. மேலும் இதன் காரணமாக சிறுவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை கதிரியக்க சிகிச்சைகளுக்காக தனியார் மருத்துவமனைகள் ஏழு லட்சம் முதல் 15 மில்லியன் வரை அறவிடுகின்றன எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை, மஹரகம வைத்தியசாலையில் இது தொடர்பில்பாரதூரமான நிலை காணப்படுவதையும் நோயாளிகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதையும் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன ஏற்றுக்கொண்டுள்ளார்.

செயல் இழந்துள்ள இயந்திரங்களை திருத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அவர் தெரிவித்தார். (அ)

# 70 இ.போ.ச. டிப்போ ஊழியர்களுக்கு சம்பளம் முறையாக வழங்கவில்லை

ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
MINISTRY OF TRANSPORT AND HIGHWAYS

கொழும்பு, மார்ச் 28

107 இ.போ.ச டிப்போக்களில் 70 டிப்போக்களின் ஊழியர்களுக்குப் பல மாதங்களாக மாதாந்த சம்பளம் முறையாக வழங்கப்படவில்லை என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

திறைசேரி மூலம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டு வந்த ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள், இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதிகள் மற்றும் பஸ் நடத்துநர்களுக்கு 8 மாதங்களுக்கு மேலாகியும் சம்பளம் முறையாக வழங்கப்படவில்லை.

இலங்கை போக்குவரத்துச் சபையில் இடம்பெறும் சட்ட விரோத கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஊழல் முறைகேடுகளினால் ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கை போக்குவரத்துச் சபையின் 4,700 பஸ்கள் நாளாந்தம் இயங்குகின்றன, சபையின் நாளாந்த வருமானம் 80 மில்லியனுக்கும் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுத் தேர்தலை முதலில் நடத்தினால் சிறந்த அரசியல் நிலை தோற்றம் பெறும்

## கூறுகின்றார் சாந்த பண்டார

**கொழும்பு, மார்ச் 28**
**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூடவுள்ள பொதுஜன பெரமுனவின் நிறைவேற்று சபைக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும். நாட்டில் அரசியல் நிலைமை நன்மை பயக்கும் வகையில் அமைய வேண்டுமாயின் பொதுத்தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் சிறந்த அரசியல் நிலைமை தோற்றம் பெற வேண்டுமாயின் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

பொதுத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்பதற்காக ஜனாதிபதி தேர்தலுக்கு நாங்கள் தயாரில்லை என்று கருத முடியாது. இந்த ஆண்டு எந்த தேர்தல் இடம்பெற்றாலும் நாங்கள் வெற்றி பெறுவோம்.

தற்போதைய அரசியல் சூழலில் எந்த அரசியல் கட்சிகளுக்கும் வரையறையற்ற அதிகாரம் கிடைக்கக்கூடாது. பெரும்பான்மை அதிகாரம் ஒரு கட்சியை மையப்படுத்தியதாக காணப்படும் சூழலில் முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெறும்-என்றார்.

(அ)

# அறகலயவினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டை துரிதமாக வழங்கவேண்டும்!

## அமைச்சர் பிரசன்ன பணிப்புரை

கொழும்பு, மார்ச் 28
2022 மே 9 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் “அரகலய” போராட்டக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துகளுக்கான இழப்பீட்டு நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு அரசாங்க மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் நட்டஈடு அலுவலகத்துக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் நேற்று காலை இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போதே நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் தீக்கிரையான 42 வீடுகளில் 33 வீடுகளுக்கு இதுவரை நஷ்டஈட்டு அலுவலகம் மூலம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தினால் 138 வாகனங்கள் உட்பட கம்பஹா மாவட்டத்தில் அதிகளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்திற்கு காரணமானவர்களுக்கு எதிரான சட்டத்தை அமுல்படுத்துவது மிகவும் மந்தகதியில் இடம்பெற்றதாக தெரிவித்த அமைச்சர், சட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

(அ)

# கைதான மக்கள் போராட்ட இயக்க உறுப்பினர்களுக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 28
ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்ட துமிந்த நாகமுவ, லஹிரு வீரசேகர மற்றும் ரத்கராவே ஜினரதன தேரர் ஆகியோரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த குழுவினர் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி கொழும்பில் மக்கள் போராட்ட இயக்கம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இந்தக் குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த போராட்டம் இந்திய மேலாதிக்கம், பொருட்களின் விலையேற்றம், வெளிநாட்டு ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பல வேறு பிரச்னைகளை முன்வைத்து இந்த போராட்டம் கோட்டை புகையிரத நிலையத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கெஹலியவின் மகள் முறைப்பாடு!

கொழும்பு, மார்ச் 28
முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகள் சமித்ரி ரம்புக்வெல நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அதன்படி தனது தந்தைக்கு சட்டத்தின் நியாயம் கிடைக்காததால், இந்த மனித உரிமை மீறல் குறித்து முறைப்பாடு அளித்ததாக அவர் கூறினார்.

அத்துடன் விசாரணையின் பின்னர் கிடைத்த சாட்சியங்களின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டாலும், தனது தந்தை கைது செய்யப்பட்டதன் பின்னர் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இது தன்னிச்சையான கைது என்றும் தனது தந்தைக்கு நீதி கிடைக்கும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# சட்டத்தை நிலைநாட்டுவது மனித உரிமை மீறல் அல்ல!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28
போராட்டம் என்ற போர்வையில் வன்முறையை விதைத்தவர்களிடம் இருந்து பாராளுமன்றம், பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி அலுவலகம் உள்ளிட்ட அரச சொத்துக்களை காப்பாற்றி நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட தான் மேற்கொண்ட நடவடிக்கைகளை மனித உரிமை மீறல் என சிலர் சுட்டிக்காட்ட முயன்றனர். இருந்தபோதும், அந்த நடவடிக்கையை அன்று எடுக்காமல் இருந்திருந்தால் இன்று நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்பியிருக்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.




நாட்டின் தற்போதைய பொருளாதார வேலைத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்து கலந்துரையாடும் நோக்குடன் முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்த சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்-

நாட்டுக்கு புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை சுமையை குறைத்து பாடசாலை கல்வியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக கட்டமைப்பில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் தேர்தலின் பின்னர் புதிய நாடாளுமன்றத்தின் கீழ் அந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

இந்த வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அனைவரினதும் ஆதரவு தேவை, 2035ஆம் ஆண்டளவில் நாட்டில் உயர் தரத்திலான கல்வி முறையை உருவாக்குவதே எமது நோக்கமாகும் என்றார்.

# விவசாய அமைச்சரின் கிளிநொச்சி வருகை விவசாயிகளுக்கு அறிவிக்கப்படவில்லையாம்!

கிளிநொச்சி, மார்ச் 28
விவசாய அமைச்சர் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டபோது விவசாயிகள் எவருக்கும் இது தொடர்பில் அறிவிக்காத நிலையில் அதில் தவறு இடம்பெற்றுள்ளதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

இந்நிலையில் நேற்றைய மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விவசாய அமைச்சருடன் மீண்டும் விசேட கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று காலை 9.30 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

விவசாய அமைச்சர் கிளிநொச்சி வந்து சென்று, தமக்கு தெரியாது என இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் நேற்றைய மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குற்றம் சுமத்தியிருந்தார்.

நேற்றைய கூட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பயிர் அழிவுக்கான நட்டயீடு வழங்கப்படாமை தொடர்பில் ஆராயப்பட்டது.

விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை என்பதால் நட்டஈட்டிற்கான காப்புறுதித் தொகையை வழங்க முடியாதுள்ளதாக விவசாய காப்புறுதி நிறுவனப் பிரதிநிதி தெரிவித்தார்.

இதன்போது இந்த பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் மூன்றாம் நிலையை மதிப்பீடாக கருதி விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களை பெறும் வகையில் தீர்மானமாக எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் குறிப்பிட்டார்.

இந்நிலையில், வெள்ள அழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சட்ட ரீதியாக மூன்றாம் நிலையை விவசாய இழப்பீட்டு காலமாக கருத்தில் எடுத்து நட்டயீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான விண்ணப்பங்களை விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டும் மழையிலும் 3ஆவது நாளாக கல்முனையில் தொடரும் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, மார்ச் 28

**கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின்மீதான நிருவாக அடாவடித்தனத்திற்கு எதிராக நீதி கோரி நடாத்தும் மக்கள் போராட்டம் நேற்று புதன்கிழமை மூன்றாவது நாளாகவும் கொட்டும் மழையிலும் தொடர்ந்தது.**

நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களுமாக பிரதேச செயலத்தின் முன்னால் வீதியருகே அமர்ந்து அமைதியான முறையில் முன்னெடுத்துள்ளனர்.

கடந்த இரு தினங்களை விட நேற்று அதிகளவான பொது மக்கள் அங்கு கூடத்தொடங்கினர். பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். (அ)



# அம்பாறை லாகுகல நுகேவெவ குளம் மக்கள் பாவனைக்காக கையளிப்பு!



அம்பாறை, மார்ச் 28

வறட்சியான காலங்களில் விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்கு உதவும் வகையில் அம்பாறை லாகுகல நுகே வெவ குளத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மக்கள் பாவனைக்காக கையளித்தார்.

8 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக்குளம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜீ. முத்துபண்டா, கடற்தொழில் மற்றும் நீரியல் வள மீன்பிடி திணைக்கள பணிப்பாளர் சுதாகரன் உட்பட அரச அதிகாரிகள் கலந்துக்கொண்டனர். (அ)

# கற்சேனை விஷ்ணு வித்தியாலயத்தில் சாதனையாளர்களை பாராட்டும் நிகழ்வு



மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கற்சேனை விஷ்ணு வித்தியாலயத்தில் சாதனையாளர் பாராட்டு நிகழ்வும் சேனையூர் சிற்றிதழ் வெளியீட்டு நிகழ்வும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

வித்தியாலய அதிபர் எஸ். சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கடந்த 8வருடங்களாக தேசிய பொதுப் பரீட்சைகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றில் திறமையை வெளிக்காட்டிய மாணவர்கள் துணை நின்ற ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது சேனையூர் 2 சிற்றிதழ் வெளியீடு செய்து வைக்கப்பட்டமையுடன் இதற்கான நயவுரையை ஆசிரிய ஆலோசகர் பு. சதீஸ்குமார் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன், பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான எஸ். மகேந்திரகுமார், ந. குகதாசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களான ரகுவரன், மூ. உதயகுமாரன், பாலர் பாடசாலை பணியக நிறைவேற்று பணிப்பாளர் சந்திரமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# சுவாமி விபுலாநந்த அடிகளின் 132ஆவது ஜனன தின நிகழ்வு

காரைதீவு, மார்ச் 28

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 132ஆவது ஜனன தின விழா நேற்று புதன்கிழமை கொட்டும் மழையிலும் காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் ஆலோசகர் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் மணிமண்டப வளாகத்தில் நடைபெற்றது.

முதல்கட்டமாக நந்திக் கொடி ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து துறவறகீதம் சரணாகதி பாடல் இசைக்கப்பட்டது.

பின்னர் சுவாமியின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தல் இடம் பெற்றது.

பிறந்த வீட்டிலுள்ள திருவுருச்சிலைக்கு காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், சுவாமி விபுலானந்த அடிகளாரின் பேத்தி திருமதி விஜயலக்ஷ்மி புவனராஜா ஆகியோர் மலர்மாலை அணிவிக்க, சுவாமிகளின் நின்றசிலைக்கு ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா மலர்மாலை அணிவித்தார்.




சுவாமிகளின் ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று பாடல் இசைக்கப்பட்டது.

சுவாமிகள் பிறந்த இல்லத்தில் விசேட வழிபாடு இடம் பெற்றது. விசேட பூசையை பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி பஞ்சாரத்தி காட்டி நடத்தினார்.

விபுலானந்த நர்த்தனாலய மாணவிகளின் ஆடல் பாடல்கள் இடம்பெற்றன.

அவர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் அருணாசலம் சுந்தரகுமாரும் கலந்து சிறப்பித்தார்.

இந்துகலாசார திணைக்கள மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நன்றியுரையாற்றினார்.

நிகழ்வில் பணிமன்ற நிருவாகிகள் ஆலய அறங்காவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். (அ)

# புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் விஜயம்

மட்டக்களப்பு, மார்ச் 28

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கி வைக்கு நோக்கில் மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் கிழக்கு புற்றுநோய் வைத்திய பராமரிப்பு நிலையத்தில் தங்கியிருந்து பராமரிப்பு மற்றும் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளும் புற்றுநோயாளர்களை பார்வையிட்டதுடன் அவர்களுக்கான உதவிகளையும் காப்போம் அமைப்பு வழங்கியிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவும் பராமரிப்பு நிலையத்தைப் பார்வையிடுவதற்காகவும் காப்போம் அமைப்பின் விசேட அழைப்பின் பேரில்



மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி முரளீதரன் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும். (அ)

# கிண்ணியாவில் இப்தார் நிகழ்வு



திருமலை, மார்ச் 28

கிண்ணியா மாஞ்சோலை முகைதீன் ஜும்மா சந்திப் பள்ளிவாசலில் இப்தார் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துக்கோரள, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இனங்களுக்கு இடையிலான நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக இந்த இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (அ)

# காஸாவில் உடனடியாக போர் நிறுத்தம் வேண்டும்

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம்

நியூயோர்க், மார்ச் 27

“காஸாவின் மனிதநேய அடிப்படையில் உடனடியாக போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும்” என வலியுறுத்தி, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானமொன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

ரமழான் பண்டிகையை கருத்தில் கொண்டு காசா பகுதியில் மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானமொன்று கொண்டுவரப்பட்டுள்ளது.



ஜோர்தான் நாட்டினால் கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு 14 உறுப்பு நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ள நிலையில், அமெரிக்கா இந்த வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல்- காஸா போர் நிறுத்தம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 4 தடவைகள் போர் நிறுத்தத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன.

எனினும், இவையணைத்தும் தோல்வியடைந்த நிலையில், முதன் முறையாகவே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நிலையில், காஸாவில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் என்டானியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர், ராஃபா நகரில் தரைவழித் தாக்குதலை மேற்கொள்ள இஸ்ரேல் தயாராகி வருவததாகவும் காஸாவின் மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் அங்கு தஞ்சம் அடைந்துள்ளமையால், இஸ்ரேல் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், காஸாவுக்குள் மனிதாபிமான உதவிகளைக் கொண்டுசெல்வதில் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், காஸா எல்லையின் ஒருபுறம், எகிப்தின் வடக்கு சினாய் மாகாணத்தில் சுமார் 7,000 நிவாரண லொரிகள் நீண்ட வரிசையில் காத்திருப்பதாகவும் காஸாவுக்கு மனிதாபிமான உதவிகளைக் கொண்டுசெல்வதற்கு இஸ்ரேல் கட்டுப்பாடற்ற அனுமதி வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, அனைத்து பிணையக் கைதிகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் மனிதாபிமான போர் நிறுத்தம் மற்றும் பிணைக் கைதிகள் விடுதலை என்பன ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்தும் தாக்குதலில் இதுவரை 32,000 இக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# உக்ரைனில் இருந்து அகதிகளை உள்வாங்க பின்னிற்கும் பிரான்ஸ்



பாரிஸ், மார்ச் 27

உக்ரைனில் இருந்து அகதிகளை உள்வாங்குவதில் பிரான்ஸ் ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் மீது ரஷ்யாவினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, சுமார் 4.3 மில்லியன் அகதிகளாக மாறியுள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட உக்ரைனியர்கள் ஐரோப்பா முழுவதும் பல்வேறு நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதன்படி போலந்து, பின்லாந்து, ஸ்பெயின் மற்றும் அயர்லாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகள் உக்ரைனிய அகதிகளுக்கு தஞ்சமளித்துள்ளதுடன், பணியில் ஈடுபடுவதற்கும் கல்வி பயில்வதற்கு உரிமை அளித்து வருகின்றன.

இருப்பினும், 64,720 உக்ரைனிய அகதிகள் தற்காலிக பாதுகாப்பில் இருப்பதாக கடந்த ஜனவரி மாதம் பிரான்ஸ் அறிவித்தது.

இந்த நிலையில், குறித்த காலப்பகுதியில் ஜெர்மன் 1.2 மில்லியனுக்கும் அதிகளவாக உக்ரைனிய அகதிகளுக்கு தஞ்சமளித்துள்ளதாக அறிவித்ததுடன், போலந்து சுமார் 1 மில்லியன் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கியுள்ளது.

இதன்படி, ஒப்பீட்டளவில் பிரான்ஸை விட ஏனைய நாடுகள் அதிகளவான அகதிகளுக்கு தஞ்சமளித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

போலந்து, பால்டிக், செக் குடியரசு, ஸ்லோவாக்கியா மற்றும் பல்கேரியா ஆகியவை தமது நாட்டு பிரஜைகளின் 1,000 பேருக்கு 25 அகதிகளுக்கு அனுமதியளித்துள்ளது.

இருப்பினும், பிரான்ஸ் 1,000 பேருக்கு ஒரு உக்ரைனிய அகதியை மாத்திரமே அனுமதிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், உக்ரைனுடனான புவியியல் அருகாமை, அகதிகளுக்கான நிதியுதவி மற்றும் சமூக வலைப்பின்னல் போன்ற காரணிகள் பிரான்ஸில் உக்ரைனிய அகதிகள் உள்வாங்கப்படாமைக்கான காரணமாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# தென் சீனக் கடலில் வலுக்கும் மோதல்!




மணிலா, மார்ச் 27

தென் சீனக் கடலில் பிலிப்பைன்ஸ் ராணுவக் கப்பல் மீது சீன கடலோரக் காவல்படை நீர் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் 3 வீரர்கள் காயமடைந்ததாக பிலிப்பைன்ஸ் அரசு தெரிவித்துள்ளது.

இதையடுத்து பிலிப்பைன்ஸ் அரசு பீஜிங்கில் உள்ள தனது தூதரக அதிகாரியை திரும்பப் பெற நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிலிப்பைன்ஸிலிருந்து 105 கடல் மைல் தொலைவில் தென் சீனக் கடலில் பயணித்த பிலிப்பைன்ஸ் இராணுவக் கப்பல் மீது இந்த நீர்த் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனக் கடலோரக் படையினரின் வன்முறைச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாக பிலிப்பைன்ஸ் வெளியுறவு அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மேலும் தண்ணீர் தாக்குதலால் கப்பல் பலத்த சேதமடைந்ததாகவும், பிலிப்பைன்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எடுவார்டோ அனோ தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# புளோரிடாவில் புதிய சட்டம்

## சமூக ஊடகத்தைப் பயன்படுத்த தடை

நியூயோர்க், மார்ச் 27

அமெரிக்காவின் சில மாநிலங்களில் அண்மைக்காலமாக சமூக ஊடக பயன்பாட்டில் பிரச்னைகள் அதிகரித்துள்ளதாக சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக சிறுவர்கள் சமூக ஊடகத்தில் அதிக நேரங்களை செலவிடுகின்றனர். இதனால் அவர்கள் பல்வேறு மன அழுத்தங்களை எதிர்கொள்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் சிறுவர்கள் சமூக ஊடகத்தை பயன்படுத்துவதை குறைக்க பல மாநிலங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அதன் பிரகாரம் புளோரிடா மாநிலத்தில் 14 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

14 மற்றும் 15 வயது சிறுவர்கள் சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்த விரும்பினால் தங்கள் பெற்றோரின் அனுமதியைப் பெற வேண்டும்.

இதற்கான சட்டமூலத்தில் புளோரிடா ஆளுநர் ரோன் டிசேன்ட்டிஸ் மார்ச் 25இல் கையெழுத்திட்டார்.

சமூக ஊடகத் தளங்கள் மூலம் ஏற்படும் மனநலப் பாதிப்புகளிலிருந்து சிறுவர்களை இந்தப் புதிய சட்டம் பாதுகாக்கும் என்று டிசேன்ட்டிசின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். (அ)

# முதல் முறையாக கோடீஸ்வரர் பட்டியலில் டொனால்ட் ட்ரம்ப்

நியூயோர்க், மார்ச் 27

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முதன் முறையாக உலக பணக்கார பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

அதன்படி, புளூம்பெர்க் கோடிஸ்வரர்கள் பட்டியலில் முதல் 500 இடங்களுக்குள் ட்ரம்ப் இடம் பிடித்துள்ளார்.

பல்வேறு நிறுவனங்களை நடத்தி வரும் பெரும் தொழிலதிபரான டொனால்ட் ட்ரம்பின் சொத்து மதிப்பு, 6.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.



அதாவது இந்திய மதிப்பில் சுமார் ரூ.54 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும். (இலங்கை மதிப்பில் - 1,962,556,050,000) அவரது நிறுவனங்களின் பங்கு 185 சதவீதம் விலை அதிகரித்ததால் அவரது சொத்து மதிப்பில் 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் உயர்ந்துள்ளது.

இதனையடுத்து அவர் உலக பணக்காரர்கள் பட்டியலில் 500 ஆவது இடத்தில் இடம் பிடித்துள்ளார்.

இதனிடையே, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரசின் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கவேண்டும்

## சீனாவில் இலங்கையர்களிடம் பிரதமர் தினேஷ் கோரிக்கை



பீஜிங், மார்ச் 28

**நாட்டின் தற்போதைய பொருளாதார அபிவிருத்தியில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு பூரணமான ஆதரவினை வழங்குமாறு சீனாவிலுள்ள இலங்கையர்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன அழைப்பு விடுத்துள்ளார்.**

சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன, பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் விசேட சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டார். இதன்போது சீனாவில் வசிக்கின்ற இலங்கை தொழில் வல்லுநர்களுடன் விசேட கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலின் போது கருத்துத் தெரிவித்த பிரதமர்" வெளிநாடுகளில் உள்ள இலங்கை சமூகம் தமது தொழில் அனுபவங்களைப் எங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அந்தந்த துறைகளில் உருவாக்கப்பட்ட புதுமையான வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலமும் தாய்நாட்டின் தற்போதைய பொருளாதார முன்னேற்றத்தில் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

எமது நாட்டிலுள்ள இலவசக் கல்வி முறை மற்றும் பிற வசதிகள் மூலம் அறிவைப் பெறுகின்ற நீங்கள் தாய்நாட்டிற்குக் கடன்பட்டிருக்கிறீர்கள். எனவே, உங்கள் தாய்நாட்டிற்கு உதவ உங்கள் தொழில்முறை திறன்களை எமக்கு வழங்குங்கள்.

நீங்கள் தத்தெடுத்த நாட்டில் உள்ள வழிகளையும் இதற்கு பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் இலங்கையின் அபிவிருத்தி பங்காளிகளாக இருந்து உங்கள் தாய்நாட்டின் சக குடிமக்களுக்கு உதவுவதன் மூலம் உங்கள் தொழில் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என நான் நம்புகின்றேன்" எனத் தெரிவித்தார். (அ)

# ஐ. தே. க. பணிமனைமீது கைக்குண்டுகள் வீச்சு!

கொழும்பு, மார்ச் 28

ஐக்கிய தேசியக் கட்சியின் பணிமனை மீது கைக்குண்டு வீசப்பட்டது. எனினும், அது வெடிக்காததால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு - கடவத்தை - எல்தெனிய பகுதியில் உள்ள பணிமனை மீது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை வீசப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல் காரணமாக இந்த கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்பட்டது.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது, கட்சி பணிமனையின் முன்பாக - வீதியில் ஒரு கைக்குண்டும் கட்சி பணிமனைக்குள் மற்றொரு கைக்குண்டும் கண்டெடுக்கப்பட்டன.

வீசப்பட்ட இந்த கைக்குண்டுகள் வெடிக்காததால் பெரும் சேதங்கள் தவிர்க்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மதுபானங்களின் விலை குறையும்!

கொழும்பு, மார்ச் 28

எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் மதுபானங்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைக் கூறினார். (ஐ)

## நாரம்மலவில் சூடு: ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 28

நாரம்மல - ரன்முத்துகல பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நாரம்மல - ரன்முத்துகல பகுதியில் இன்று அதிகாலை இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இணையம் ஊடாக தொலைபேசிகளை விற்பனை செய்வதாக கூறி போலியான வர்த்தகத்தை முன்னெடுத்த சந்தேக நபர் ஒருவரே பொலிஸாரின் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், தன்னை சந்திக்க வந்த வாடிக்கையாளர்களைத் தாக்கி, கொள்ளையிட முயற்சித்தபோதே பொலிஸார் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தில் 28 வயதான சந்தேகநபர் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்றும் துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து அவருடன் வருகைத் தந்திருந்த மேலும் இரு கொள்ளையர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## இ.போ.ச. பஸ் விபத்தில் மூவர் காயம்!

கொழும்பு, மார்ச் 28

தெஹியத்தகண்டி - மஹியங்கனை வீதியின் மில்லத்தேவ பகுதியில் இபோச பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மூவர் காயம் அடைந்துள்ளனர்.

மஹியங்கனை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸே இவ்வாறு வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 5 வயது சிறுவர் உட்பட மேலும் மூவர் காயம் அடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கிராதுருகொட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிராதுருகொட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுதேஷ் சதுரங்க தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

# செயற்கை நுண்ணறிவுக்கான மையத்தை உருவாக்க முடிவு!



கொழும்பு, மார்ச் 28

டிஜிற்றல் பரிவர்த்தனை நிறுவனம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் ஆகியவற்றை நாட்டில் நிறுவுவதற்கு தேவையான சட்டங்கள் இந்த ஆண்டின் நடுப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய தூதரகமும் இலங்கை அரசாங்கத்தின் தொழில்நுட்ப அமைச்சும் இணைந்து, கொழும்பில் அமைந்துள்ள தனியார் ஹோட்டலில் நடத்திய டிஜிற்றல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார மாற்றத் திட்டத்தை இலகுபடுத்தும் வகையில் புதிய நிறுவன கட்டமைப்பொன்றை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

தகவல் தொழில்நுட்ப சபை போன்ற தற்போதுள்ள கட்டமைப்புகளில் இருந்து விலகி, டிஜிற்றல் மாற்றத்திற்கான முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான மையத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்தியுள்ளோம். அதற்காக 2024 வரவு-செலவுத் திட்டத்தில் இருந்து ஒரு பில்லியன் ரூபாயை ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

விவசாயத்தை நவீனமயமாக்குவது, வறுமையை நிவர்த்தி செய்வது மற்றும் கல்வி முறையை சீர்திருத்துவது போன்றவற்றில் டிஜிற்றல் பொது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள வறுமையைக் குறைக்கும் தேசிய இலக்குடன் அரசாங்கம் செயற்படுகிறது.

உத்தேச முகவர் நிறுவனத்தை செயல்படுத்தும் வகையில் இந்த ஆண்டின் நடுப்பகுதிக்குள் அதற்கான சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களில் சோதனை

கொழும்பு, மார்ச் 28

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை பரிசோதிப்பதற்காக நாடளாவிய ரீதியில் 3000 பொது சுகாதார பரிசோதகர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த சோதனைகளின்போது, பண்டிகைக் காலத்திற்காக தயாரிக்கப்பட்ட பல உணவு மாதிரிகளை பரிசோதகர்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுமக்கள் பண்டிகைக் காலத்துக்கான உணவுகளை வாங்க வரும்போது, அவர்களுக்கு உணவு தயாரிக்கக் கொடுக்கப்படும் பொருட்கள், பண்டிகைக் காலத்துக்காக விளைவிக்கப்படும் உணவு வகைகள், பழங்கள் போன்றவற்றைச் சரிபார்ப்போம். என்றும் அதை ஆய்வாளர்களுக்கு அனுப்பி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் உணவு உற்பத்தி நிலையங்களில் உணவு தயாரிக்கும் நபர்களின் மருத்துவ பதிவுகளை பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

## பொலிஸ் அலுவலர்களை தாக்கிய நால்வர் கைது!

கொழும்பு, மார்ச் 28

சந்தேகத்திற்கிடமான இரண்டு ஓட்டோக்களை சோதனையிடச் சென்றபோது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தாக்கி விட்டு தப்பிச் செல்ல தயாராக இருந்த நால்வர் வாள்கள் மற்றும் தடிகளுடன் கைது செய்யப்பட்டதாக அளுத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றச் செயல்களில் ஈடுபடச் சென்ற இரண்டு ஓட்டோக்களைச் சோதனையிட்ட போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்துருவ பிரதேசத்தைச் சேர்ந்த 19, 27, 28 மற்றும் 29 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி அளுத்கம தர்கா நகரில் 6 சந்தேகநபர்கள் வந்த இரு ஓட்டோக்களை சோதனையிடுவதற்கு தயாரானபோது இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதையடுத்து இந்த தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## புல்மோட்டை...

ராஜரட்டை பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் இதற்கான ஆய்வை மேற்கொண்டிருந்தனர்.

புல்மோட்டை தாது மணல் படிவுகளில் பிரித் தெடுக்கப்பட்ட சிர்கோனியம் தீவிர வெப்பநிலை யைத் தாங்கும் திறன் கொண்ட வலுவான தயாரிப்புகளை உருவாக்க பயன்ப டுத்தப்படுவதாக ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் சஞ்சீவனி கிங்கத்தர தெரிவித்தார்.

கனிய மணலில் இருந்து சிர்கோனியத்தை பிரித்தெடுக்கும் முறைமைக்காக ராஜரட்டை பல்கலைக்கழகத்துக்கு காப்புரிமை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## முல்லைத்தீவு...

நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

டிப்பர் வாகனமும், கப் ரக வாகனமும் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வைத்தியர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இரவு 7.00 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கடன் மறுசீரமைப்பு தோல்வியடைந்தால் எந்த அரசாலும் நாட்டை நிர்வகிக்கமுடியாது!

## பந்துல குணவர்த்தன

கொழும்பு, மார்ச் 28

வெளிநாட்டு அரசமுறை கடன் மறுசீரமைப்பு தோல்வியடைந்தால் எந்த அரசாங்கத்தாலும் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதை நாட்டு மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். கடன் மறுசீரமைப்பு வெற்றி பெற்றால் மாத்திரமே இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி நிர்மாண பணிகளை முன்னெடுக்க முடியும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்க ளும் வெளிநாடுகளில் கடன் பெற்றே அரச நிர்வாகத்தை முன்னெடுத்தன.

பெற்றுக்கொண்ட கடன்களை மீள் செலுத்த முடியாது என்று அறிவிக்கப்பட்டவுடன் அபிவிருத்தி பணிகளுக்கு நிதியுதவி வழங்கிய நிறுவனங்கள் கடன் வழங்கலை இடைநிறுத்தின. இதனால் அபிவிருத்தி பணிகளும் ஸ்தம்பிதமடைந்தன.

அரசமுறை கடன்களை மறுசீரமைப்பதற்கு தீர்மானமிக்க பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, தேசிய ஒப்பந்தகாரர்கள் அவர்களின் நிதியை கொண்டு அபிவிருத்தி பணிகளை ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்ததும் தேசிய ஒப்பந்தகாரர்களுக்குரிய நிதி முழுமையாக செலுத்தப்படும் - என்றார்

## உரிய...

தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரிடம் கோஷங்கள் இல்லாததால், அரசாங்கம் தேர்தலை பிற்போடுவதாக பொய்ப் பிரச்சாரம் செய்து மக்களை தவறாக வழிநடத்த முயற்சிப்பதாக சுட்டிக்காட்டிய வஜிர அபேவர்தன, தேர்தலை வலுவாக எதிர்கொள்ளும் பலம் ஜனாதிபதி தலைமையிலான அணிக்கு இருப்பதாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன,

"ஓரிரு சம்பவங்களால் இந்த நாடு வங்குரோத்தாகவில்லை. இந்த நிலை நீண்டகால காரணங்களால் உருவாகியது. நாட்டில் நீண்ட காலமாக யுத்தம் இடம்பெற்றது. யுத்தத்திற்குத் தேவையான அனைத்து ஆயுதங்களும் நாட்டின் நிதியில் மூலமே கொள்வனவு செய்யப்பட்டன. அதன்படி முப்பது வருடங்கள் யுத்தம் செய்தோம். முப்பது வருடகால யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்தது. மேலும், 1971 இல், டிரில்லியன் டொலர் பணம் அழிக்கப்பட்டது.

1987 மற்றும் 1988 இல் ஏற்பட்ட பயங்கரமான சூழ்நிலையால் ஏராளமான உயிர்கள் அழிக்கப்பட்டன. மேலும் பொருளாதாரமும் மிகவும் பாதிக்கப்பட்டது. பௌத்த தேரர்கள், பொலிஸார் மற்றும் ஏனைய பாதுகாப்புப் படையினர், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டனர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தரவும் கொல்லப்பட்டார். ஏராளமான ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் மிகவும் திறமையான தோட்ட முகாமையாளர்களை நாடு இழந்தது.

இந்த நிலையில்தான் நாம் சண்டை பிடித்துக்கொண்டது போதும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து கருத்து வேறுபாடுகளை களைந்து தேசியக் கொள்கைகளுக்காக ஒன்றுபட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பரிந்துரையொன்றை முன்வைத்தார்.

இப்போதும் அது பாராளுமன்றத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட சட்ட மூலங்களில் தேசிய கொள்கை குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்காக ஆசியாவிலேயே மிகவும் சக்திவாய்ந்த நிதிக் கட்டுப்பாட்டு சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளன.

பணப் பயன்பாட்டையும் சட்டக் கட்டமைப்பில் சேர்த்துள்ளோம். எனவே, திருடன், திருடன் என்று யாருக்கும் சொல்ல முடியாது. அனைவருக்கும் சமமான சட்டத்தை அமுல்படுத்துவதே எமது நோக்கம் என்பதைக் கூற வேண்டும். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை கையாள்வது தொடர்பில் மேலும் சில விசேட சட்ட மூலங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இலங்கை வங்குரோத்தானதை அடுத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இனி பணத்தை அச்சிட முடியாது என்று அறிவித்தார். ஆனால் விருப்பமின்றியேனும் நாட்டின் வரி வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எத்தனை சிரமங்கள் இருந்தாலும் மக்களுக்கு நிவாரணம் வழங்க மறக்கவில்லை. அஸ்வெசும பலன்கள் ரூ.15000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் உயர்த்தப்பட்டது. இந்நாட்டில் இருபது இலட்சம் பேருக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் உறுமய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மிகக் குறுகிய காலத்தில் இவ்வாறான பணிகளைச் செய்தார். ஆறு வருடங்கள் மற்றும் பன்னிரண்டு வருடங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதிகளிடம் நாடு ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் அனைவரையும் விட தற்போதைய ஜனாதிபதி இந்த குறுகிய காலத்தில் செயற்பட்ட விதத்தை வேறு எந்த ஜனாதிபதியாலும் ஈடு செய்ய முடியாது. அந்த ஜனாதிபதிகள் வங்குரோத்தான நாட்டில் செயற்படவில்லை. இதன் காரணமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது அனைவரும் அவரைப் பலப்படுத்தி ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும்.

மேலும், எதிர்காலத்தில் அவரை எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும். இந்தப் பயணம் மாறினால், மீண்டும் பெற்றோல், கேஸ் சிலிண்டர்களுடன் வீதியில் வரிசையில் நிற்கும் யுகம் மீண்டும் உருவாகும். எனவே, மக்கள் கவனமாக செயல்பட வேண்டும்.

நாட்டில் தற்போதைய அரசியல் செயற்பாடுகளை சீர்குலைத்து வெறுப்பு அரசியலில் ஈடுபடும் குழுக்கள் உள்ளன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சகல சக்திகளிலிருந்தும் இலங்கையை விடுவித்து, ஆசியாவின் வளர்ந்த நாடாக உயர்த்த வேண்டுமானால், இந்நாட்டின் பொதுமக்கள் இவ்விடயத்தில் கவனமாகச் செயற்பட வேண்டும்.

அரசியலமைப்பின்படி ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும், அதன் பின்னர் அரசியலமைப்பின்படி பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலை ஒத்திவைப்பதற்காக தேர்தல் திருத்தங்கள் கொண்டு வரப்படவில்லை. கோஷங்கள் இல்லாததால் தான் தேர்தலை நடத்துவதில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. நாட்டின் வங்குரோத்து நிலை நீக்கப்பட்டு வரும் நிலையில், எதிர்க்கட்சிகளுக்கு இப்போது கோஷங்கள் இல்லாமல் போய்விட்டன.

கடந்த மூன்று ஆண்டுகளாக புத்தாண்டை கொண்டாடும் வாய்ப்பு மக்களுக்கு இருக்கவில்லை. ஆனால் இம்முறை புத்தாண்டை கொண்டாடும் சூழலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உருவாக்கியுள்ளார். அவர் இந்த நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பியுள்ளார். அவர் அனைத்து மக்களின் நன்றிக்கு தகுதியானவர்-என்றார். (அ)

## ரஷ்ய...

இரண்டு இலங்கையர்களும், உக்ரைன் தரப்பில் மூன்று பேரும் இதுவரையில் கொல்லப்பட்டுள் ளனர்.

டொனெட்ஸ்க் பகுதியில் உள்ள ரஷ்ய பதுங்கு குழியின் மீது உக்ரைன் நடத்திய தாக்குதலில் இலங்கையர் ஒருவர் காயமடைந்ததாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த சக இலங்கையர் ஒருவரால் அவர் அந்த இடத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. இதனடிப்படையில், கடந்த ஆண்டு ரஷ்யாவின் படையெடுப்பிற்கு எதிராக உக்ரைனுக்காக போராடிய மூன்று இலங்கையர்களுடன் இந்த இரண்டு இறப்புகளும் சேர்ந்துள்ளன. என அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் இப்போது உக்ரேனில் ரஷ்ய இராணுவத்தில் பணியாற்றி வருகின்றனர். குறித்த இலங்கையர்கள் ரஷ்யாவில் மாதாந்தம் 3,000 டொலர் சம்பளம் மற்றும் ரஷ்ய குடியுரிமையை எதிர்பார்த்து ஆயுதமேந்தி போராடுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

பெரும்பாலும் ஓய்வுபெற்ற இலங்கைப் படையினர் - ரஷ்ய இராணுவத்தில் சேர தீவிரமாக முயற்சித்து வருவதாகவும், இலங்கையில் உள்நாட்டில் கடுமையான வறுமையின் மத்தியில் மொஸ்கோவின் பணத்திற்கு ஈடாக உக்ரேனியப் படைகளின் கைகளில் மரணத்தைப் பணயம் வைக்கத் தயாராக இருப்பதாகவும் அல் ஜசீரா மேலும் தெரிவித்துள்ளது.

டிசெம்பரில், சிறப்புப் போராளிகள் பிரிவுக்கு தலைமை தாங்கிய கப்டன் ரனிஷ் ஹேவகே மற்றும் எம்.எம். பிரியந்த மற்றும் ரொட்னி ஜெயசிங்க ஆகிய இரு இலங்கையர்களும் ரஷ்ய படைகளுக்கு எதிராக போரிட்டு கொல்லப்பட்டனர்.

டிசெம்பர் 15 அன்று பல உக்ரேனிய வீரர்களுடன் கீவ் நகருக்கு கிழக்கே 400 கி.மீ. (240 மைல்) தொலைவில் உள்ள மிலினோவ் என்ற இடத்தில் ஹேவகே புதைக்கப்பட்டார், ஆனால் மற்ற இரண்டு இலங்கையர்களின் உடல்கள் மீட்கப்படவில்லை.

உக்ரேனின் பிராந்திய பாதுகாப்புக்கான சர்வதேச படையணியில் பணியாற்றிய சுமார் 20 இலங்கையர்கள் ஹேவகேவின் மரணத்திற்குப் பிறகு அப்பகுதியை விட்டு வெளியேறினர், 25 வயதான லஹிரு ஹத்துருசிங்க, காயமடைந்த ரனிஷ் ஹேவகேவை பல கிலோமீற்றர்கள் தாண்டி பாதுகாப்புக்காக அழைத்துச் சென்றனர். ஆனாலும் அவர் துரதிஷ்டவசமாக உயிரிழந்தார்.

உக்ரேனுக்காகப் போரிடுவதற்காக இலங்கை இராணுவத்திலிருந்து வெளியேறிய ஹத்துருசிங்க, ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் பக்கம் இன்னும் இணைந்திருக்கும் ஒரே இலங்கையர் என நம்பப்படுகிறது. (அ)

## காணிகளை...

போராட்டத்தை அந்தக் கிராம மக்கள் முன்னெடுத்திருந்தனர்.

இராணுவ வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த 11ஆம் திகதி முல்லைத்தீவு அரச அதிபருக்கும் மனு ஒன்றை கேப்பாபிலவு மக்கள் கையளித்தனர்.

இந்த மனு தொடர்பில் 10 நாட்களில் உரிய தரப்புகளுடன் பேசி பதில் தருவதாக அரச அதிபர் உறுதியளித்தார். ஆனால், மீண்டும் அரச அதிபரை மக்கள் சந்தித்தபோது காணிகளை விடுவிப்பது தொடர்பில் உறுதியான முடிவு கிடைக்கவில்லை என்று கூறியிருந்தார். இந்த நிலையிலேயே நேற்று இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

கேப்பாபிலவில் இராணுவத்தின் வசம் 172 ஏக்கர் தனியார் காணிகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 225 பேரில்...

நாட்டின் வரலாற்றில் அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் உள்ளார். இந்த நாட்டில் சட்டம் நடைமுறைப்படுத்துவதாகவே இதனை கருத வேண்டும்-என்றார். (அ)

## ஜனாதிபதி...

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும். சர்வதேச பிணைமுறிகளில் இருந்து 12 பில்லியன் டொலர் கடன்களை பெற்றது. இந்த நிதிக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியவில்லை. மறுபுறம் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு விற்கப்படடது. அந்த நிதியும் மாயமானது.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய உற்பத்திகளை மேம்படுத்த எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. இறக்குமதி, பொருளாதாரத்தில் மாத்திரம் கவனம் செலுத்தியது. தேசிய பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் வகையில் புதிய அபிவிருத்தி திட்டங்கள் ஏதும் நிர்மாணிக்கப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் தான் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் ஊடாக அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயல்பாடுகளை முன்னெடுக்கிறார். இதற்கு அவருக்கு மக்களாணை கிடையாது. அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதாக இருந்தால் ஜனாதிபதி புதிதாக மக்களாணை பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் குறித்து கட்சி மட்டத்தில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. கட்சி ரீதியில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக செயல்படுபவர்கள் கட்சியில் இருந்து தாராளமாக வெளியேறலாம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் வவுனியாவில் ஒருவர் கைதானார்!

வவுனியா, மார்ச் 28

விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்தார் எனக் குற்றம்சாட்டி வவுனியாவில் நேற்று முன் தினம் ஒருவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரவிந்தன் என்பவரே பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். பேஸ்புக் ஊடாக விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயன்றதாக அவர் மீது குற்றம்சுமத்தப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை கடன் மறுசீரமைப்புக்கு சீனா தொடர்ந்து ஆதரவளிக்கும்!

## இரு நாட்டு பிரதமர்கள் சந்திப்பில் உறுதி

பீஜிங், மார்ச் 28

**இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்பதாக சீனா மீண்டும் உறுதியளித்துள்ளது.**

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் சீன பிரதமர் ஆகியோருக்கு இடையே இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் சீனா தொடர்ச்சியாக ஆதரவளிக்குமென சீன பிரதமர் லீ கியூயாங் இதன்போது தெரிவித்துள்ளார்.

பொருளாதார பின்னடைவின் பின்னர் இலங்கை பெற்றுள்ள முன்னேற்றத்தையும் சீனப் பிரதமர் இதன்போது பாராட்டியுள்ளார்.



இதனிடையே, சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று அந்நாட்டின் ஜனாதிபதியை சந்தித்தார். (அ)

# இந்திய மீனவர்கள் மூவருக்குச் சிறை!

கொழும்பு, மார்ச் 28

இலங்கை கடற்பரப்பில் இரு வேறு சந்தர்ப்பங்களில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 36 இந்திய மீனவர்களில் 33 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 15 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களினதும் 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட 21 பேரினதும் வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது 33 மீனவர்கள் 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 18 மாதங்கள் சிறைத்தண்டனை என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, படகோட்டிகளான இருவருக்கு 6 மாதச் சிறைத்தண்டனையும் ஒருவர் இரண்டாவது தடவையாக இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசித்தமையால் அவருக்கு 1 வருட சிறைத் தண்டனையும் விதித்து ஊர்காவற்றுறை நீதவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

மூன்றாவது படகின் உரிமையாளர் படகில் இருந்தமையால் அந்த படகை அரசுடைமையாக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக 8 பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மூவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமையை அடுத்து, 11 இந்திய மீனவர்கள் இலங்கையில் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். (அ)

# இலங்கையில் முதலீடு செய்ய பல உலக நாடுகள் முன்வருகை!

## ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 28

நாட்டில் முதலீடு செய்ய பல்வேறு உல நாடுகள் முன்வந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் கடந்த காலத்தில் பணவீக்கம் நூற்றுக்கு 70 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது. அதனை நிவர்த்தி செய்வதற்கு மத்தியவங்கியிடம் காணப்பட்ட மாற்று வழி வங்கிவட்டியை அதிகரிப்பது மாத்திரமே.

அதனை செயற்படுத்தியதன் ஊடாகவே இன்று பணவீக்கத்தை எம்மால் விரைவாக கட்டுப்படுத்த முடிந்தது.

இன்று நாட்டின் பணவீக்கம் நூற்றுக்கு 5 வீதமாக காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவம் காரணமாக இன்று நாடு கட்டம் கட்டமாக மீண்டு வருகின்றது.

பல முதலீட்டாளர்கள் இன்று நாட்டில் முதலீடு செய்ய முன்வந்துள்ளனர். அத்துடன் இன்று வட்டி



வீதங்கள் குறைப்பதற்கான சுற்றறிக்கையை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. அனைத்து துறைகளும் பொறுப்புடன் சரியாக இயங்கும் பட்சத்தில் விரைவாக மூலதன சந்தையை வழமைக்கு கொண்டுவர முடியும்-என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடைபெறும்!

## உறுதிப்படுத்தியது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் பிரகாரமே செயற்படுவார். எனவே, முதலில் ஜனாதிபதி தேர்தலே நடத்தப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கிரிக்கெட் விளையாட்டில் நடுவர்களிடம் ஆட்டமிழப்பா இல்லையா என வீரர்கள் வினவலாம். அதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. ஆனால் போட்டி விதிமுறைகளுக்கு அமையவே நடுவரின் தீர்ப்பு அமையும்.

அதுபோலவே முன்கூட்டியே பொதுத்தேர்தலை நடத்துமாறு சிலர் கோரலாம். எனினும், ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரமே செயற்படுவார்.

நாடு முன்னேற வேண்டுமெனில் அடுத்த ஜனாதிபதி




தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறவேண்டும்-என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரம் நடக்கும்

## தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 28

இந்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டாலும், செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 17 வரையான காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என ஆளும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க, இந்த வருடம் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்தால் பாராளுமன்ற தேர்தலை நடத்துவதை தவிர வேறு வழியில்லை.

எனினும், பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டியிருந்தால் அது ஜனாதிபதித் தேர்தலில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. அதனைத் தொடர்ந்து உரிய நேரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும்.

இந்த ஆண்டு செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 17 வரை ஜனாதிபதி தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஜூலை மாத இறுதியில் அல்லது ஆகஸ்ட் தொடக்கத்தில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (அ)

# பெரமுனவின் மே தின நிகழ்வு கெம்பல் பார்க் மைதானத்தில்

கொழும்பு, மார்ச் 28

பொதுஜன பெரமுன கட்சியின் மே தினக் கூட்டம் மே முதலாம் திகதி கொழும்பு கெம்பல் பார்க் மைதானத்தில் நடைபெறும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

மே தினக் கூட்டத்தை மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, மொட்டு கட்சியின் மாவட்ட மட்டத்திலான கூட்டம் அம்பாந்தோட்டையில் இருந்து ஆரம்பமாகவும் எனவும் எஸ்.எம். சந்திரசேன குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




### ஐ. பி. எல். தொடர்:

# இரண்டாவது போட்டியிலும் சென்னை அசத்தல் வெற்றி!

சென்னை, மார்ச் 28

நடப்பு ஐ. பி. எல். தொடரன் 7ஆவது லீக் போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ் அணியை 63 ஓட்டங்களில் வீழ்த்தியுள்ளது ருதுராஜ் கெய்க்வாட் தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 206 ஓட்டங்கள் எடுத்தது. ரச்சின் ரவீந்திரா 20 பந்துகளில் 46 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அணித்தலைவர் ருதுராஜ் 46 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

ஷிவம் துபே, 23 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்தார். 6 பந்துகளில் 14 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார் சமீர் ரிஸ்வி. மிற்செல் 24 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை களத்தில் இருந்தார்.

குஜராத் அணி சார்பில் பந்துவீசிய ரஷித் 2 விக்கெட் கைப்பற்றினார். சாய் கிஷோர், ஸ்பென்சர் ஜோன்சன், மோகித் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

207 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை குஜராத் விரட்டியது. அணித்தலைவர் கில் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன் பிறகு சீரான இடைவெளியில் குஜராத் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் ஆட்டமிழந்தனர். சாஹா, விஜய் ஷங்கர், மில்லர், சாய் சுதர்ஷன், ஓமர்ஸாய், ரஷித், தெவாட்டியா ஆகியோர் ஆட்டமிழந்தனர். இதில், அதிகபட்சமாக சாய் சுதர்ஷன் 37 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்தது அந்த அணி.

இதன் மூலம் 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணி வெற்றி பெற்றது. நடப்பு தொடரில் 2 போட்டிகளில் விளையாடி இரண்டிலும் வெற்றி பெற்றுள்ளது சென்னை.

தீபக் சஹர், முஸ்தபிஹூர் ரஹ்மான், துஷார் தேஷ்பாண்டே ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். மிற்செல் மற்றும் பத்திரண தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

ஷிவம் துபே ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

## தொடக்க வீரராக சிறப்பான ஆட்டத்தை வழங்கவே விருப்பம்!

### விராட் கோலி



பெங்களூரு, மார்ச் 28

இருபது- 20 கிரிக்கெட்டில் நான் தொடக்க வீரராக களமிறங்கி அணிக்கு சிறப்பான தொடக்கத்தை கொடுக்க முயற்சிக்கிறேன் - என்று பெங்களூரு அணியின் விராட் கோலி கூறியுள்ளார்.

மேலும், "உலகம் முழுவதும் இருபது- 20 கிரிக்கெட்டை விளம்பரப்படுத்த மட்டும் எனது பெயர் பயன்படுத்தப்படுகிறது என்பது எனக்குத் தெரியும். ஆனால், இருபது - 20 போட்டிகளில் சிறப்பாக விளையாடும் திறன் என்னுள் இன்னும் இருப்பதாக நினைக்கிறேன். இருபது- 20 கிரிக்கெட்டில் நான் தொடக்க வீரராக களமிறங்கி அணிக்கு சிறப்பான தொடக்கத்தை கொடுக்க முயற்சிக்கிறேன். ஆனால், விக்கெட்கள் விழத் தொடங்கும் போது, சூழ்நிலைக்கு தகுந்தவாறு விளையாட வேண்டியுள்ளது" - என்றார். (ஐ)

## ஷூப்மன் கில்லுக்கு ரூ. 43 இலட்சம் அபராதம்!

சென்னை, மார்ச் 28

குஜராத் ரைட்டன்ஸ் அணியின் தலைவர் ஷூப்மன் கில்லுக்கு 12 இலட்சம் (இந்திய) ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ. பி. எல். தொடரின் 7ஆவது லீக் போட்டியில் சென்னை - குஜராத் அணிகள் மோதின. இதில், சென்னை அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பில் ஈடுபட்ட குஜராத் அணி மெதுவாக பந்துவீசியது. இதற்காகவே அந்த அணியின் தலைவரான ஷூப்மன் கில்லுக்கு 12 இலட்சம் (இந்திய) ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)




## தென்னாபிரிக்கா வீரர்கள் ஒப்பந்தம் டி கொக், நோர்ட்ஜேக்கு இடமில்லை!




கேப்டவுன், மார்ச் 28

தென்னாபிரிக்கா கிரிக்கெட் வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் இருந்து குயின்ரன் டி கொக், நோர்ட்ஜே ஆகியோர் இடம்பெறவில்லை.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 2024 -25 ஆம் ஆண்டுக்கான வீரர்கள் ஒப்பந்தத்தை புதுப்பித்துள்ளது.

நேற்று வெளியிடப்பட்ட இந்தப் பட்டியலில், ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்த குயின்ரன் டி கொக்கின் பெயர் இடம்பெறவில்லை.

இதேநேரம், காயம் காரணமாக கடந்த ஓராண்டாக விளையாடமல் இருந்துவரும் வேகப்பந்து வீச்சாளர் அண்ட்ரிச் நோர்ட்ஜேவுக்கும் இந்த ஒப்பந்தத்தில் இடம் கிடைக்கவில்லை. இதேபோல் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்துள்ள டீன் எல்கரும் பட்டியலில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.

மேலும் கடந்த ஓராண்டாக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்காக விளையாடிய சிசாண்டா மகாலா, வெய்ன் பார்னெல், கீகன் பீற்றர்சன் ஆகியோருக்கும் ஒப்பந்தத்தில் இடம் கிடைக்கவில்லை.

மேலும் ஜெரால்ட் கோட்ஸி, நந்த்ரே பர்கர், டோனி டி ஸோர்ஸி ஆகியோர் ஒப்பந்தத்தில் புதிதாக இடம் பெற்றுள்ளனர். (ஐ)

## இலங்கையுடனான 2ஆவது டெஸ்ட் பங்களாதேஷ் அணி அறிவிப்பு



டாக்கா, மார்ச் 28

பங்களாதேஷ் சென்றுள்ள இலங்கை அணி இருபது - 20, ஒருநாள், டெஸ்ட் தொடர்களில் விளையாடி வருகிறது. இதில், இருபது - 20 தொடரை இலங்கையும் ஒருநாள் தொடரை பங்களாதேஷ் அணியும் வென்றுள்ளன.

2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் போட்டியில் வென்று இலங்கை முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில், 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் நாளை மறுதினம் சட்டோகிராமில் தொடங்குகிறது.

இந்தப் போட்டிக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், சகலதுறை வீரரான சகீப் அல்ஹசன் இடம்பெற்றுள்ளார். இந்த அணிக்கு நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ தலைமை தாங்கவுள்ளார்.

அணி விவரம் - நஜ்முல் ஹூசைன் ஷாண்டோ (அணித் தலைவர்), சகிர் ஹசன், மஹ்முதுல் ஹசன் ஜாய், ஷத்மன் இஸ்லாம், லிற்றன் தாஸ், மொமினுல் ஹக், சகீப் அல் ஹசன், ஷஹாதத் ஹொசைன், மெஹிதி ஹசன் மிராஸ், நயீம் ஹசன், தைஜூல் இஸ்லாம், ஷோரிஃபுல் இஸ்லாம், கலீத் அஹ்மத், நஹித் ராணா, ஹசன் மஹ்முத். (ஐ)

# புடின் எதிர்நோக்கும் பாரிய சவால்:

## மொஸ்கோவை உலுக்கிய ஜிஹாதிகளின் தாக்குதல்கள்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

எப்போதும் ரஷ்யாவின் உளவுத்துறை மிகவும் சக்திவாய்ந்ததாக அறியப்பட்டது. அப்படி இருக்கும்போது மாஸ்கோவை உலுக்கிய ஜிகாதிகளின் தாக்குதலை எப்படி முன்கூட்டியே கணிக்க முடியாமல் போனது என்று கேள்வி எழுந்திருக்கிறது.


சில ரஷ்யர்கள் கொடூரமான இந்த தாக்குதலுக்கு, ஐஎஸ்ஐஎஸ் உரிமை கோரினாலும் மந்தமான அரசின் பாதுகாப்பைக் குற்றம் சாட்டுகின்றனர். மார்ச் 22, 2024 ரஷ்யாவின் மாஸ்கோவின் குரோகஸ் சிட்டி ஹால் கச்சேரி அரங்கில் நிகழ்ந்த படுகொலை ரஷ்யாவின் நவீன வரலாற்றில் ஒரு இருண்ட வடிவத்தை உருவாக்கி உள்ளது.



### பிளாக்மெயில் என்று விவரிப்பு:

ரஷ்ய உளவுத்துறை சேவைகள் மேற்கு நாடுகளிடமிருந்து மீண்டும் மீண்டும் எச்சரிக்கைகளைப் பெற்றன. மார்ச் 8 அன்று அமெரிக்காவில் இருந்து பொது எச்சரிக்கையாக, மாஸ்கோவில் பெரிய கூட்டங்களை குறிவைக்கவும், இசை நிகழ்ச்சிகளை உள்ளடக்கவும் தீவிரவாதிகள் உடனடித் திட்டங்களைக் கொண்டுள்ளனர் என்ற அறிக்கைகளை அமெரிக்க தூதரகம் வெளியிட்டது.

அதேவேளை இந்த மாத தொடக்கத்தில் மாஸ்கோவில் கச்சேரிகள் உட்பட பெரிய கூட்டங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷ்யாவிற்கு எச்சரிக்கை விடுத்ததாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூறியது. அந்த நேரத்தில் கிரெம்ளின் அதை "பிரசாரம்" என்றும் சமீபத்திய ரஷ்ய தேர்தலில் தலையிட வாஷிங்டனின் முயற்சி என்றும் நிராகரித்தது.







### மாஸ்கோவில் தீவிரவாத தாக்குதல்கள்:

அரசியல் மற்றும் மத நோக்கங்களுக்காக பொது மக்கள் மீது இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் 1994 ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவில் தாக்குதல் நடத்தி வருகின்றன. மத்திய ரஷ்யா மற்றும் காக்கேசியாயின் வட பகுதிகளில் அதிக அளவு இஸ்லாமியர்கள் வசிக்கும் பகுதிகளில் பிரிவினை வாத நோக்கத்திற்காக இத்தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

சோவியத் யூனியன் உடைந்த பிறகுதான், இந்த செச்சினிய இஸ்லாமிய தீவிரவாதம் அதிகமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. செச்சின்ய தீவிரவாதிகள், 1994லிருந்து ரஷ்யாவில் நடத்தப்பட்ட பல தீவிரவாதங்களுக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

### செச்சினியா குடியரசு:

தற்போது செச்சினியா ரஷ்யக் கூட்டமைப்பின் ஒரு குடியரசாகும். இது வடக்கு கவ்காசஸ் மலைத்தொடரில் தெற்கு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதன் எல்லைகளாக வடமேற்கே ஸ்தாவ்ரபோல் பிரதேசம், வடகிழக்கு மற்றும் கிழக்கில் தாகெஸ்தான் குடியரசும், தெற்கில் ஜோர்ஜியா, மேற்கே இங்குஷேத்தியா மற்றும் வடக்கு அசேத்தியா ஆகிய ரஷ்யக் குடியரசுகளும் அமைந்துள்ளன.

1991 இல் சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் செச்சினியா விடுதலையை நாடியது. ரஷ்யாவுடனான முதலாவது செச்சினியப் போரின் போது (1994-1996) செச்சினியரல்லாத சிறுபான்மையோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் அது நிழல் அரசை அறிவித்தது. ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசு மட்டுமே ஜனவரி 2000ம் ஆண்டில் இதனை அங்கீகரித்தது.

1999 இல் இடம்பெற்ற இரண்டாம் போரின் பின்னர் ரஷ்யா தனது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் செச்சினியாவைக் கொண்டுவந்தது.

செச்சின்ய தீவிரவாதிகள், 1994லிருந்து ரஷ்யாவில் நடத்தப்பட்ட பல தீவிரவாதங்களுக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அதில் மிக்கவும் பயங்கரமானது, 2004ல் சுமார் 30 செச்சினிய தீவிரவாதிகள் 1,128 மக்களை பேஸியன் பள்ளியில் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு, தண்ணீர், உணவு இல்லாமல் 50 மணி நேரம் கொடுமை படுத்தனர். மூன்று நாட்களில் 334 மக்களைக் கொன்றனர், அதில் 186 பேர் சிறுவர்கள் / குழந்தைகள் ஆவார். இத்தாக்குதலை செச்சினிய கமாண்டர் சமில் பஸேவ் பொறுப்பேற்றார்.

### 1999 அடுக்குமாடி குண்டுவெடிப்பு:

1990 களின் பிற்பகுதியில் இருந்து செச்சினிய பிரிவினைவாதிகள் மற்றும் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் வடக்கு காக்சஸ் பகுதியிலிருந்து போராளிகள் தாக்குதல்களை நடத்தினர். கச்சேரி அரங்குகள், மருத்துவமனைகள் மற்றும் பொதுப் பள்ளிகளைக் கைப்பற்றினர். மாஸ்கோவின் பரந்து விரிந்த சுரங்கப்பாதை அமைப்பிற்கு தற்கொலை குண்டுதாரிகளை அனுப்புதல், மேலும் பேருந்துகள் மற்றும் விமானங்களில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

1999-ம் ஆண்டு செப்டம்பர் 13ம் தேதி அதிகாலை அன்று ரஷ்யாவின் தென் மாஸ்கோவில் உள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் குண்டுவெடிப்பு ஏற்பட்டது. இதில் 118 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது

மேலும் இந்த தாக்குதலுக்கு, செச்சினியாவின் வடக்கு காகசஸ் குடியரசின் முஸ்லிம் பிரிவினைவாதிகள் மீது மாஸ்கோ இந்த தாக்குதல்களுக்கு குற்றம் சாட்டியது.

இதன் பின்னர் செச்சினியாவின் வடக்கு காகசஸ் குடியரசின் முஸ்லிம் பிரிவினைவாதிகளை அடியோடு அழிக்க ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புட்டின் போரை தொடங்கினார்.

### 2002 தியேட்டர் பணயக்கைதிகள் :

அக்டோபர் 23, 2002 அன்று மாஸ்கோவில் உள்ள டுப்ரோவ்கா திரையரங்கிற்குள் ஒரு இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த போது சுமார் 19 பெண் மற்றும் 21 ஆண் செச்சென் கிளர்ச்சியாளர்கள் நுழைந்து 800 க்கும் மேற்பட்டவர்களை பணயக்கைதிகளாக பிடித்தனர்.

இதில் செச்சென் கிளர்ச்சியாளர்களுக்கும், பணயக்கைதிகளுக்கும் இடையிலான மோதல் 3 நாள் நீடித்தது.

தாக்குதல் நடத்தியவர்களை முறியடிக்க ரஷ்ய பாதுகாப்புப் படையினர் தியேட்டருக்குள் வாயுவை செலுத்தி அதன் பிறகு உள்ளே நுழைந்தபோது இது முடிவுக்கு வந்தது. ஆனால் இந்த சம்பவத்தில் மொத்தமாக 130 பணயக் கைதிகள் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் வாயுவில் மூச்சுத் திணறலால் உயிரிழந்தனர்.

### 2003 ரொக் கச்சேரி தாக்குதல்:


2003 ஜூலை 5, அன்று இரண்டு பெண்கள் மனித வெடிகுண்டாக மாஸ்கோவிற்கு அருகிலுள்ள துஷினோ விமானநிலையத்தில் ரொக் இசை நிகழ்ச்சியின் போது தங்களைத் தாங்களே வெடிக்கச் செய்தனர். இந்த தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர். மற்றும் 50 பேர் காயமடைந்தனர். அவர்கள் இரண்டு பேரும் செச்சென் பிரிவினைவாதிகள் என ரஷ்யாவால் அடையாளம் காணப்பட்டனர்.

2004 மெட்ரோ குண்டுவெடிப்பு:

2004 பிப்ரவரி 6, அன்று, மாஸ்கோ சுரங்கப்பாதையில், காலை அவசர நேரத்தில், அதிகம் அறியப்படாத செச்சென் குழுவால் வெடிகுண்டு வெடிக்கப்பட்டது, இதில் 41 பேர் கொல்லப்பட்டனர்.

மீண்டும் 2010 மார்ச் 29, அன்று இரண்டு பெண்கள் மனித வெடிகுண்டாக மாஸ்கோ சுரங்கப்பாதையில் தங்களைத் தாங்களே வெடிக்கச் செய்தனர். இதில் ஒரு பெண் லுபியங்கா நிலையத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர். மற்றொரு பெண், குளுடீ உளவுத்துறை சேவைகளின் தலைமையகம் குறிவைத்தனர்.

(16ம் பக்கத் தொடர்ச்சி)



# நல்லிணக்கம் பற்றிய கதையளப்புகளுக்கு மத்தியில் வடக்கு, கிழக்கில் அதிகரிக்கும் அதிருப்தி!



கலாநிதி ஜெகான் பெரேரா

தங்களை நேர்மையாக நடத்தி தங்களது மனக்குறைகளுக்கு தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் தவறியதனால் தமிழ் அரசியல் சமுதாயத்தின் மத்தியில் காணப்படும் அதிருப்தி பாராளுமன்றத்தில் ஒரு புதிய திருப்பத்தை எடுக்கிறது. பெரும்பான்மை வாக்குகளை வைத்திருப்பவர்களுக்கு நியாயத்தை புரியவைக்க இயலாத நிலையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுக்களுக்கு பதிலாக அமைதிவழிப் போராட்டத்தில் இறங்குகின்றார்கள்.

இன, மத சிறுபான்மைச் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் பாராளுமன்ற நடவடிக்கைகளை குழப்புவதற்கு அமளிதுமளியில் ஈடுபடுவது அரிது. அதற்கு ஒரு காரணம் அவர்களின் எண்ணிக்கை போதாமல் இருப்பதேயாகும். ஆனால், சபைக்குள் குழப்பம் விழைவிப்பது என்பது ஏதோ தங்களது தனியுரிமை போன்று ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அடிக்கடி நடந்துகொள்வார்கள். எந்தவித முன்னெச்சரிக்கையும் இன்றி 2018 அக்டோபர் அரசியலமைப்புச் சதிமுயற்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவிநீக்கியதை தொடர்ந்து பாராளுமன்றத்தில் இடம்பெற்ற காடைத்தனம் சபைக்குள் நிகழ்ந்த குழப்பங்களின் உச்சமாக இருந்தது.

தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் வன்முறையில் ஈடுபடுவதில்லை. தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டுவதை அவர்கள் வார்த்தைப் பரிமாற்றங்களுடன் மட்டுப்படுத்துவார்கள். ஆனால், கடந்த வாரம் தமிழ்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையின் மத்தியில் இறங்கி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. தங்களது எதிர்ப்பை வெளிக்காட்ட அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டது ஆறு மாதகாலப் பகுதிக் குள் இது இரண்டாவது தடவையாகும்.

அதிகப் பெரும்பான்மையான பெரும்பான்மைச் சமூகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஒப்பிடும் போது மிகவும் சிறிய எண்ணிக்கையான தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைதிவழியிலான தங்களது நடவடிக்கைகளும் பேச்சுக்களும் நேர்மறையான விளை வுகளைத் தராதபட்சத்தில் வேறு மார்க்கம் இன்றி இறுதி நடவடிக்கையாகவே அவர்களின் போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருக்கிறது.

தங்களது முறைப்பாடுகளை கருத்தில் எடுத்து செயல்படுவதற்கு அரசாங்கம் காட்டும் மறுப்பின் பிரதிபலிப் பாகவே தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தை நடத்தினார்கள். வடக்கில் உள்ள புராதன வழி பாட்டுத்தலத்தில் மார்ச் 8 மகாசிவராத்திரி தினத்தில் பூசை வழிபாடுகளை நடத்தியபோது கைது செய்யப் பட்ட எட்டு குடிமக்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப் பட்டதற்கு எதிர்ப்பு தெரி வித்தே பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் போராட்டம் செய்தனர்.

வவுனியாவின் நெடுங்கேணியில் வெடுக்குநாறிமலை தொல்லியல் பகுதியில் அமைந்திருக்கும் இந்துக் கோவிலின் பிரதம குரு உட்பட எட்டுப்பேரை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறி அங்கு பிரவேசித்ததாகக் கூறி பொலிசார் கைதுசெய்தனர். பூசை வழிபாடுகளை நடத்துவதற்கு அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்கெனவே நீதிமன்றம் நிராகரித்திருந்தது. தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளினால் செய்யப்பட்ட தவறான முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே எட்டு குடிமக்களும் கைதுசெய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களை விடுதலை செய்யுமாறு கோரினர்.

## அவசியமான ஒருமைப்பாடு

சபைக்குள் போராட்டத்தை நடத்திய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தனது ஒருமைப்பாட்டை வெளிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஒவ்வொருவரும் தங்களது மத வழிபாடுகளை சுதந்திரமாகச் செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும் அது அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமையாகும் என்றும் குறிப்பிட்டார். வழிபாட்டில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்ட சம்பவம் குடிமக்களின் உரிமையை மீறிய ஒரு செயலாக இருக்க முடியும் என்பது அவரது அபிப்பிராயமாகும்.

இனவேறுபாட்டைக் கடந்து அவர்களுக்கு ஒருமைப்பாட்டை வெளிக்காட்ட முன்வந்த எதிர்க்கட்சி தலைவரின் செயல் இன்றைய கட்டத்தில் நாட்டுக்கு தேவையாக இருக்கின்ற தேசிய தலைமைத்துவத்தின் அடையாளங்களில் ஒன்றாகும். அத்தகைய விவகாரங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கப்படுவதற்காக பாராளுமன்றத்திற்கு பொலிஸ்மா அதிபர் அழைக்கப்படவேண்டும் எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை விடுத்தார்.

தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு,கிழக்கில் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தீவிரமடைந்திருக்கின்றன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகக் கூறி சில இந்துக் கோவில்களுக்கு மக்கள் செல்வதற்கு அதிகாரிகள் கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்கள்.

வடக்கிற்கு வெளியே தகவல்கள் பெருமளவுக்கு தெரியாவிட்டாலும் கூட, வடமாகாணத்தில் புதிய பல பௌத்த கட்டமைப்புக்களும் வழிபாட்டுத் தலங்களும் அமைக்கப்பட்டுவருவது குறித்து வடக்கில் வாழும் மக்கள் குழப்பமடைந்திருக்கிறார்கள். வடமாகாணம் இந்துக்களை மிகப்பெரிய மதக்குழுவினராகக் கொண்டது. அதற்கு அடுத்தாக கிறிஸதவர்களும் முஸ்லிம்களும் அங்கு வாழ்கிறார்கள்.

கிழக்கிலும் கூட மாவடிவேம்பில் உள்ள ஒரு வழிபாட்டுத்தலத்தை அகழ்வாராய்ச்சி தலம் என்றுகூறி அங்கு மக்கள் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான பிரச்சினை தற்போது நீதிமன்ற விசாரணையில் இருக்கிறது.

தங்கள் மத்தியில் சிங்களவர்களை குடியமர்த்துவதை நோக்கமாகக் கொண்ட முயற்சியாகவே இதை அப்பகுதி மக்கள் விசன மடைந்திருக்கிறார்கள். குடியமர்த்தப்படும் சிங்களவர்கள் காலப்போக்கில் அந்த நிலப்பகுதிக்கு உரிமைகோருவார்கள் என்று அவர்கள் சந்தேகிக்கிறார்கள். தங்களது சொந்த சமூகத்தின் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுப்பதை விடுத்து நியாயம் எது என்பதை தீர்மானிப்பதற்கு பரந்தளவிலான பின்புலத்தில் பிரச்னையை அணுகவேண்டியதன் முக்கியத்தும் குறித்த விளக்கப்பாட்டை பொலிசாருக்கும் சகல அரச அதிகாரிகளுக்கும் ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும்.




பாராளுமன்றத்தில் அமளிதுமளி இடம்பெற்று மூன்று நாட்களுக்கு பிறகு வடக்கே யாழ்ப்பாணத்துக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 234 ஏக்கருக்கும் அதிகமான காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு கையளிக்கும் வைபவத்துக்கு தலைமை தாங்கினார். 20 இலட்சம் பேருக்கு காணி உரிமையை வழங்குவதை நோக்கமாகக்கொண்ட "உறுமய" செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக யாழ்ப்பாண மக்களுக்கு 408 க்கும் அதிகமான காணி உறுதிப்பத்திரங்களை ஜனாதிபதி வழங்கினார்.

உறுமய காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகள் ஜூன் மாதமளவில் நிறைவு செய்யப்படுவதை உறுதிசெய்யுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். மக்களில் குறிப்பிட்ட பிரிவினரை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேர்தல் சட்டங்களின் பிரகாரம் ஜூன் மாதமே காலக்கெடுவாகும்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் புதிய விபத்துச்சேவை மற்றும் அவசரசேவைப் பிரிவை திறந்துவைக்கும் வைபவத்திலும் ஜனாதிபதி கலந்துகொண்டார். இந்த வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கு சலுகை அடிப்படையில் கடனை வழங்கிய நெதர்லாந்து நாட்டின் தூதுவர் பொனீ ஹொர்பாச்சுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

## அவசியமான தீர்வு

நாடு தேர்தல்களுக்கு தயாராகும் நிலையில் ஜனாதிபதி மற்றும் தமிழ்க்கட்சிகள் உட்பட அரசியல் சக்திகள் இந்த யதார்த்தத்தின் செல்வாக்கிற்கு உட்படவேண்டியிருக்கும். தேசியவாத அரசியலுக்கு எதிரான ஒரு தாராளவாதப் போக்கைக் கடைப்பிடித்து வந்தவர் என்பதே ஜனாதிபதி மீது இன, மத சிறுபான்மைச் சமூகங்களுக்கு இருக்கக்கூடிய நம்பகத்தன்மையின் ஆதாரமாகும். அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை ஆதரிக்கும் சில தலைவர்களில் ஜனாதிபதி ஒருவர். மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்காக 1987 ஆம் ஆண்டில் அந்த திருத்தம் ஜனாதிபதியின் மாமனார் ஜே. ஆர். ஜெயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்டது.

2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக தெரிவான உடனடியாகவே விக்கிரமசிங்க 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தினார். மாகாண சபைகளுக்கான அதிகாரங்க ளில் காணி, பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்கவேண்டியது அவசியமாகும். ஆனால் அதில் இருந்து பின்வாங்கும் போக்கு காணப்படுகிறது.

தமிழ் அடியார்கள் பூசை வழிபாடுகளை நடத்தச் சென்ற வெடுக்குநாறிமலை அகழ்வாராய்ச்சி பகுதியில் நிலம் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருக்கிறது. பொலி ஸூம் அவ்வாறே. மத்திய அரசாங்க மட்டத்தில் இருப்ப வர்கள் மாகாணமட்டத்தில் மக்களின் அபிலாசைகளைப் பற்றி அக்கறை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர் கள் பெரும்பாலும் பெரும்பான்மை இன உணர்வுகளில் ஆழ்ந்துபோனவர்களாக உள்ளனர்.

கிழக்கிலும் இதே நிலைவரத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. மயிலத்தமடு கால்நடை வளர்ப்பாளர்களின் பிரச்சினை கூருணர்ச்சி கொண்ட ஒன்றாக இருக்கிறது. அவர்களின் மேய்ச்சல் தரைகளை வெளிமாவட்டத்தவர்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருக்கிறார்கள். அந்த பிரச்சினை தொடர்பாகவும் தமிழ்க் கட்சிகளின் உறுப்பி னர்கள் நடத்திய போராட்டத்தினால் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டது.

மேய்ச்சல் தரைகள் சட்டவிரோத குடியேற்றங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதற்கு எதிராக விவசாயிகள் போராடுகிறார்கள் என்று தமிழ்க்கட்சிகள் சுட்டிக் காட்டின. ஆனால் எந்தப் பயனும் இல்லை.பொலிசார் நீதிமன்ற உத்தரவுகளை மதித்துச் செயல்படுகிறார்களில்லை.

தேர்தல்கள் நெருங்கும் நிலையில் பிரதான அரசியல்வாதிகள் பெருமளவு உரைகளை நிகழ்த்துகிறார்கள். அவை கூடுதலான அளவுக்கு அர்த்தமுடையவையாகவும் இருக்கின்றன. இவர்கள் எல்லோரும் பழைய தலைவர்களை விடவும் இனப்பிரச்சினை மற்றும் தேசியப்பிரச்னைகள் தொடர்பில் தெளிவான ஆய்வுகளைச் செய்திருப்பதை உரைகள் வெளிக்காட்டுகின்றன. இது நீண்டகால இனப்பிரச்சினைக்கு முடிவொன்று அண்மிக்கிறது என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறது. பிரதான தலைவர்களும் கூட பிரச்சினைகளை ஆய்வின் அடிப்படையில் நோக்குவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

உதாரணமாக, ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)வின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க நாடு சுதந்திரம் பெற்ற 1948 ஆம் ஆண்டில் இருந்து அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் இன, மத அடையாள அரசியலை தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதை கட்டம் கட்டமாக விபரித்து உரைகளை நிகழ்த்துகிறார்.

பிரச்சினை என்ன என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டுள்ள இந்த தலைவர்கள் தீர்வொன்றைக் கொடுக்கவேண்டியது அவசியமாகும். வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்களின் விரக்தியைப் போக்கக்கூடியதாக அந்த தீர்வில் மாகாணங்களுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களும் உள்ளடக்கப்படவேண்டியது அவசியமாகும். ●

# புடடின் எதிர்நோக்கும் பாரிய சவால்:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)


**2011 விமான நிலைய தற்கொலை குண்டு:**

ஜனவரி 24, 2011 அன்று ஒரு பெண் மனிதவெடிகுண்டாக மாஸ்கோ டோமோடெடோவோ சர்வதேச விமான நிலையத்தின் வருகை மண்டபத்தைத் தாக்கினார், இதில் 37 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு காகசஸ் எமிரேட் குழு பொறுப்பேற்றது.

தற்போதய ரஷ்ய தலைநகர் மாஸ்கோவின் ராக் இசை நிகழ்ச்சி குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு ஐஎஸ்ஐஎஸ்-கே இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது.

2021 இல் அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்னர் ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான் இயக்கத்தின் மீது ஐஎஸ்ஐஎஸ்-கே போர் தொடுத்து வருகிறது.

மாஸ்கோ இன்னும் தலிபான்களை ஒரு “பயங்கரவாத குழு” என்று பட்டியலிட்டாலும், அது அதனுடன் தொடர்பைத் தீவிரப்படுத்தியுள்ளது. மாஸ்கோவிலும் பிராந்திய பாதுகாப்பு மாநாடுகளிலும் அதன் தூதுவர்களை வரவேற்றது. இதன் விளைவாக இத்தாக்குதல் நடந்ததாகவும் கூறப்படுகிறது.





**உக்ரைன் நோக்கி விரல் நீட்டுகிறது:**

படுகொலை தாக்குதலை நடாத்திய சந்தேகத்திற்குரிய காரை உக்ரைன் மற்றும் பெலாரஸ் எல்லையை ஒட்டிய மேற்கு பிரையன்ஸ்க் பகுதியில் சனிக்கிழமை அதிகாலை, ரஷ்ய பொலீசார் தடுத்து நிறுத்தியதாக கூறினார். துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக் காரில் பிஸ்டல் மற்றும் வெடிமருந்துகளுடன் தாஜிக்கிஸ்தான் கடவுச்சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக காவல் துறை வட்டாரங்கள் கூறின. தாஜிகிஸ்தான் ஆப்கானிஸ்தானின் எல்லையாக உள்ளது.

மாஸ்கோ கச்சேரி அரங்கில் பயங்கர தாக்குதல் நடத்திய நான்கு துப்பாக்கிதாரிகளும் கைது செய்யப்பட்டதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும் தெரிவித்துள்ளார். மொத்தம் 11 பேர் கைது செய்யப்பட்டதாகவும், துப்பாக்கி ஏந்திய நான்கு பேரும் உக்ரைனுக்குச் சென்ற போது பிடிபட்டதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐஎஸ்ஐஎஸ் உரிமைகோரல் குறித்து ரஷ்யா அதிபர் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. தொலைக்காட்சி உரையில், திரு புட்டின் படுகொலையை கண்டித்துள்ளார். இருபது ஆண்டுகளாக ரஷ்யாவில் மிகவும் கொடிய ஒரு காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத செயல் என்றும், தாக்குதல் நடத்தியவர்கள் உக்ரைனுக்கு தப்பிச் செல்ல முயன்றதாக புட்டின் கூறியுள்ளார்.

